விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 06 வெள்ளிக்கிழமை (18.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 061




## இலங்கை தமிழர் விவகாரம்

# ராகுல்காந்தி தலைமையில் விசேடகுழு இலங்கை வரும்!

(சென்னை)

இலங்கை தமிழர்களின் நிலைமையை நேரில் அறிய இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி தலைமையில் பத்துப் பேர் கொண்ட விசேட குழு விரைவில் இலங்கை வரும்.

இவ்வாறு தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர் யுவராஜா தெரிவித்துள்ளார். இராமநாதபுரத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் யுவராஜா மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழர் பிரச்சினையை மற்ற கட்சிகள் அரசியலுக்காக பயன்படுத்தி வருகின்றன. கடந்த பல மாதங்களில் எந்தக் கட்சி தலைவரும் அகதிகள் முகாமுக்கு சென்று தமிழர்களை சந்திக்கவில்லை. ஆனால் (02ஆம் பக்கம் பார்க்க)



## அத்துமீறிய தமிழக மீனவர்களை கடற்படை கைது செய்யவில்லை

### கடற்படை பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பருத்தித்துறைக் கடற்பரப்பினுள் தமிழக மீனவர்கள் 112 பேர் கைது செய்யப்பட்ட விடயத்துக்கும் கடற்படைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டதுடன் அவர்களது 18 வள்ளங்களும் கைப்பற்றப்பட்டதாக தமிழகத்திலுள்ள அரசியல்வாதிகளும் பொது அமைப்புக்களும் குற்றம் சாட்டியுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்களை வன்மையாக மறுப்பதாகவும் கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார். தமிழ் (02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்களை கைது செய்வதில்லை

(பருத்தித்துறை)

குடாநாட்டு கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது எனவும் அவர்களை கைது செய்யும் நடவடிக்கையை கைவிடுவதெனவும் யாழ். மாவட்ட மீனவர்கள் தீர்மானித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட மீனவர்கள் சமாசங்களின் பிரதிநிதிகளுக்கும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை பருத்தித்துறை (02ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித் தேர்தல் மூலம் அரசுக்குப் பாடம் புகட்டுங்கள்

### யாழ்ப்பாணத்தில் ஐ.தே.கட்சி அறைகூவல்

(காரைநகர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அரசாங்கத்திற்கு சரியான பாடம் புகட்டவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சித்தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களுக்கான பிரசாரப் பணிகளை முன்னெடுப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய தலைமையில் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, சுவாமிநாதன், திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர்.

இக்குழுவினர் நல்லூர் ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டு காரைநகருக்கு விஜயம் செய்து சுயதொழில் திட்டங்களை ஆரம்பித்து வைத்தபின் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

இதன்போதே (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா விவகாரத்தில் சட்டம் மாறுகிறது

சரத் பொன்சேகா விவகாரத்தில் சட்டம் நேரத்திற்கு நேரம் மாற்றமடைந்து செல்வதாக முன்னாள்நீதியரசர் சரத்என்சில்வா தெரிவித்துள்ளார். யுத்த வெற்றிக் (02ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக முதல்வர் கருணாநிதிக்கு அமைச்சர் டக்ளஸ் அவசர கடிதம்

இலங்கைக் கடற்பகுதிக்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைவதால் ஏற்பட்டு வரும் சிக்கல்களை விபரித்து தமிழக முதல்வர் மு.கருணாநிதிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவசர கடிதமொன்றை நேற்று அனுப்பிவைத்துள்ளார்.

தொலைநகல் மூலம் நேற்று அனுப்பிவைக்கப்பட்ட அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் இங்கு தரப்படுகின்றது.

கலைஞர் மு.கருணாநிதி
முதல்வர்,
தமிழ்நாடு

கலைஞர் அவர்களுக்கு,

பிரியமுடன் உங்களுக்கு வணக்கம்!...

தமிழக மக்களின் முதல்வராகிய உங்கள் மீது ஈழத்தமிழ் மக்கள் தீராத பற்றுதலை கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழக மக்களின் அரசியல் சிம்மாசனத்தில் கொலு வீற்றிருக்கும் நீங்கள் மத்திய அரசிலும் பங்கெடுத்து தமிழக மக்களுக்கு சிறந்த (20ஆம் பக்கம் பார்க்க)




### தமிழக மீனவர் விவகாரம்

## அமைச்சர் பீரிஸ்-கிருஷ்ணா தொலைபேசியில் உரையாடல்

(கொழும்பு)

பருத்தித்துறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தொலைபேசி மூலம் உரையாடியுள்ளார். கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை (20ஆம் பக்கம் பார்க்க)




## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பௌர்ணமி தின கலை நிகழ்வு நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ் கல்வி வலயத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட இக்கலை நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், கலை நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)







## தமிழக மீனவர்களை...

முனை புனித தோமையார் தேவாலய முன்றலில் நடைபெற்றது.

வடமராட்சி கடற்றொழில் சமாசத் தலைவர் எமிலியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் இரவீந்திரன், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் தலைவர் தவரட்ணம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சூசை ஆனந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

கடற்றொழிலாளர்கள் தற்போது எதிர் நோக்கும் பிரச்சினைக்கு உரிய தீர்வினைப் பெற்றுத்தருகிறோம். இந் திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் பல தரப்பினரிடமும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பலதரப்பட்ட பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டும் உரிய தீர்வு காணப்படவில்லை. எனவே உரிய பேச்சுவார்த்தைகளின் மூலம் உறுதியான தீர்வு எட்டப்பட வேண்டும்.

இதனை என்னால் மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

மேலும் கடல் வளங்களைப் பாதுகாக்கும் வகையில் இன்று (நேற்று) முதல் யாழ்.குடா நாட்டு கடற்பரப்பில் இழுவைப்படகு மீன்படி தடை செய்யப்படுகிறது. இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.குடாநாட்டு கடற்பரப்பில் அத்துமீறும் தமிழக மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை கைவிடுவது எனவும் பேச்சுவார்த்தை மூலம் சுமுகமான தீர்வைப் பெற்ற பின்னர் கைப்பற்றி வைத்துள்ள தமிழகமீனவர்களின் இழுவைப்படகுகளை ஒப்படைப்பதெனவும் தொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்டது. (ந-5,6,10)

## ராகுல் காந்தி...

இளைஞர் காங்கிரஸ்சார்பில் 37 முகாம்களுக்கு சென்று குறைகளை கேட்டறிந்துள்ளோம்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக காங்கிரஸ் கட்சி ஒருபோதும் செயல்படாது. இலங்கை ஜனாதிபதி ஹிட்லரை போலசர்வாதிகார ஆட்சிநடத்திசெல்கிறார்.

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி செல்லாமல் இருக்க எல்லை கோடு அமைக்கவேண்டும். இதனைமத்திய அரசிடம் வலியுறுத்துவோம்.

இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்கள் விடுவிக்கப்படும்வரை இளைஞர் காங்கிரஸார் கறுப்பு பட்டி அணிந்துஎதிர்ப்பைவெளிக்காட்டுவார்கள்.

இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலையை அறிய ராகுல்காந்திதலைமையில் 10 பேர் கொண்ட குழு இலங்கைக்கு சென்று ஆய்வு நடத்த உள்ளது என்றார்.

இதேவேளை கடந்த வருட இறுதியில் சென்னைக்குச்சென்றிருந்தராகுல் காந்தி; இலங்கைத்தமிழர்களைநாம்ஒருபோதும் கைவிடமாட்டோம் என்றும் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் நான் நேரடியாகத் தலையிடுவேன் என்றும் குறிப்பிட்டமை இங்கு சுட்டிக் காட்டுதற்குரியது. (ந-5)

## அத்துமீறிய தமிழக...

நாட்டில் தொடர்ந்தும் இலங்கைக் கடற்படையினர் மீது குற்றம் சுமத்தி வருகின்றனர். இலங்கையில் வடபகுதி கடலோரப் பகுதிக்குள் தமிழக மீனவர்கள் இழுவைப் படகுகள் மூலம் மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.மீனவர்களின் வலைகள் உட்பட மீன்வளத்தையும் அள்ளிச்செல்கின்றனர்.

இது தொடர்பாக மீனவர்கள் தொடர்ந்தும் முறைப்பாடுகளைச் செய்து வருகின்றனர். இலங்கைக் கரையோரம் வந்து மீன் பிடியில் ஈடுபடும் இவர்களை கடற்படையினர் இதுவரை தடுத்து நிறுத்தவில்லை; தாக்கவுமில்லை.

பருத்தித்துறை முனைக்கடற்பரப்பில் அத்துமீறிமீன்பிடியில்ஈடுபட்டதமிழக மீனவர்களை யாழ்.மீனவர்களே சுற்றிவளைத்து கரைக்கு அழைத்துச் சென்றனர். அவர்களே பொலிஸாரிடம் ஒப்படைத்துமுள்ளனர். கடற்படையினர் இதில் தலையிடவுமில்லை; தொடர்புமில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

**விநியோகஸ்தர் தேவை**

கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் புத்தகங்கள், சஞ்சிகைகள் பொது இடங்களுக்கு/வீடுகளுக்கு விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை.
முகாமையாளர்
தொடர்பு:- 021 5670100
077 3657303
(3833)

## பொன்சேகா...

காக சரத் பொன்சேகா ஆற்றிய சேவையை பாராட்டும் வகையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடியில் ஈடுபட்டதாக சரத் பொன்சேகா மீது எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர வேண்டுமாயின் பொலிஸில் சரத் பொன்சேகாவிற்கு எதிராக முறைப்பாடு செய்திருக்க வேண்டுமென முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா வலியுறுத்தியுள்ளார். (ந-5)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவஞானம் சீவரத்தினம்



ஊரெழுவை பிறப்பிடமாகவும் சின்னப்புதுக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் சீவரத்தினம் அவர்கள் புதன்கிழமை (16.02.2011) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி சீவரத்தினத்தின் (வன இலாகா, வவுனியா) மனைவியும், காலஞ்சென்ற சீவரத்தினம் சிவராஜா (வன இலாகா, வவுனியா), சிவரஞ்சினி மகேஸ்வரன் (ஆசிரியை வெளிக்குளம்), யசோதா கமலநாதன் (ஆசிரியை வெளிக்குளம்), சிவதாசன் (பொறியியலாளர் கனடா) ஆகியோரின் தாயாரும், மகேஸ்வரன் (பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வவுனியா), கமலநாதன் (கட்டட திணைக்களம்), இராஜேஸ்வரி, தயாங்கினி ஆகியோரின் மாமியாரும், மதன் (கனடா), நீதன், மிதுலன், வானதி (கனடா), காண்டீபன், மயூரா, சிந்துஜா, பிரியங்கா, விதுஷன், தர்ஷன், சனனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிறு (20.02.2011) அன்று காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மகன்: கண்ணன் (சிவதாசன்),
மகள்: சிவரஞ்சினி, யசோதா (ஆசிரியை).

24, குளபள்ள வீதி,
சின்னப்புதுக்குளம், வவுனியா.
024-2224427, 024-2224422
(3836)

விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

Diploma in Microsoft Office 2010
Dip. in Pre-Press Desktop Publishing
Dip. in Video Production & Multimedia
Dip in Computerized Accounting
Dip.in Web Designing & Development
Tally | AutoCAD | Internet and E-mail




DIPLOMA IN HARDWARE ENGINEERING
Microprocessor, Various Mother Board Handing, All Type of Cards, HDD, FDD, Printers, Installation of O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking

DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, சாவகச்சேரி. Tel. :021-227 0243

மாபெரும் மலிவு விற்பனை...

நல்லூர்
சரவணா ரெக்ஸ்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறிகள்
மாபெரும் மலிவு விற்பனை எங்குமே காணாத அதிசிறப்புத் தள்ளுபடி

இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே
20.02.2011
ஞாயிற்றுக்கிழமை வரை



பஞ்சாபிகள், கொட்டன் சாறிகள், பட்டுசாறிகள், சில்க்சாறிகள், பஞ்சாபி துணிகள் ஏராளம்! ஏராளம்!!
அலை அலையாக வாரீர்!
அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்!

காலம்:- 16.02.2011 - 20.02.2011
இடம்:- நல்லூர் பூங்கனிச்சோலைக்கு முன்பாக
நேரம்:- காலை 9.30 மணி முதல் 8 மணி வரை

வாடிக்கையாளர் நலன் கருதி பிரத்தியேகமான இடம்
நல்லூர் பூங்கனிச்சோலைக்கு முன்பாக
சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்
(சி-2456)

# இன்று ஒரு தகவல்

## சண்டையை நிறுத்தும்வழி

இந்த உலகத்தில் எவ்வளவோ உயிரினங்கள் உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக சண்டை போடுகின்றன. இப்பொழுது இரண்டு மாடுகள் சண்டை போடுகின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன செய்யும்? இரண்டும் முட்டிக் கொள்ளும். அவையிரண்டும் சண்டைபோடுவதற்கு ஆயுதமாக உபயோகிக்கப்படுவது அவற்றின் கொம்புகள்.

இரண்டு சேவல்கள் சண்டைபோட்டுக் கொள்கின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு ஆயுதமாக உபயோகப்படுவது அவற்றின் கால் நகங்கள். காலால்தான் அவை ஒன்றுடனொன்று சண்டையிட்டுக் கொள்ளும். ஆனால் இரண்டு மனிதர்கள் சண்டை போட்டுக் கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் இன்ன பொருளைத்தான் ஆயுதமாக உபயோகப்படுத்துவான் என்று குறிப்பாக சொல்லமுடியாது.

கல்லை எடுப்பான்– கத்தியை எடுப்பான்– துப்பாக்கியை எடுப்பான்.

வாயால் திட்டுவான்–கையால் அடிப்பான் – காலால் உதைப்பான் – சகலகலா வல்லவன். விலங்குகளெல்லாம் பொதுவாக வாயைச் சாப்பிடுவதற்கு மட்டும்தான் பயன்படுத்துகின்றன. ஆனால் இவன் சாப்பிடுவதும் அதனால்தான். சாப்பிட்டு விட்டு திட்டுவதும் அதனால் தான். ஆனால் ஒரு விடயத்தில் கெட்டிக்காரன்.

"நாம் சண்டை போட்டுக் கொண்டாலும் பரவாயில்லை. கோழிகள் சண்டை போடாமல் இருக்க வேண்டும்" என்று ஆசைப்படுகிறான். எதற்காக? கோழிகள் சண்டை போடாமல் இருந்தால் நிறைய முட்டைகள் இடுமாம் அதற்காகத்தான் இந்த அக்கறை. கோழிப் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு இது ஒரு பிரச்சினை.

பண்ணையில் வளர்க்கும் கோழிகளுக்குள் அடிக்கடி சண்டை வந்து விடுகிறது. அதனால் முட்டை உற்பத்தி குறைந்து விடுகிறது.

சரி... இதற்கு என்ன செய்வது? பண்ணையில் போய் உட்கார்ந்து தினமும் பஞ்சாயத்துப் பண்ணி கொண்டிருக்க முடியுமா?

அமெரிக்காவில் கோழிப்பண்ணை வைத்திருக்கும் ஒருவர் இதைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஒரு வழியையும் கண்டு பிடித்தார்.

அதாவது கோழிகளுக்கெல்லாம் மூக்குக் கண்ணாடி மாட்டி விட்டால் சண்டை போடும் குணம் குறைந்து விடும். முட்டை அதிகமாக இடும் அந்தக் கண்ணாடியிலுள்ள லென்ஸ் சிவப்பு நிறத்தில் இருக்க வேண்டும்.

இது ஏற்கனவே நடைமுறையில் கண்டுபிடிக்கப்பட்ட விடயம்.

ஆனால் எல்லா கோழிக்கும் சிவப்பு மூக்குக் கண்ணாடி எப்படி மாட்டிவிடுவது? அப்படியே மாட்டிவிட்டாலும் அது நழுவாமல் இருக்குமா? நாமெல்லாம் நடுவிரலால் மூக்குக் கண்ணாடியின் நடுவில் தொட்டு ஸ்டைலாக சரிபண்ணிக் கொள்கிறோமோ அதேபோல் கோழி சரிபண்ணிக் கொள்ளுமா? இது தான் பிரச்சனை. இதற்கு அவர் என்ன வழி கண்டுபிடித்தார் என்றால்... கோழிக்கெல்லாம் மூக்குக் கண்ணாடிக்குப் பதிலாக விழியொட்டு வில்லைகளைப் (Contact lens) பொருத்திவிடலாம் ஒன்று கண்டு பிடித்தார்.

அதேபோல் செய்து பார்த்தார். அதன்பின் கோழிகளெல்லாம் சண்டை போடவில்லையாம் சமாதானப்பிரியர்களாகி விட்டதாம்.

கோழிகளுக்கு இயல்பாகவே சண்டைபோடும் குணமுண்டு.

ஆனால் அதன் கண்ணுக்கு பார்க்கும் பொருளெல்லாம் ரோஜா நிறத்திலேயோ... இன்னும் சொல்லப்போனால் அழுத்தமான சிவப்பு நிறத்திலேயோ தெரிந்ததென்றால் சண்டை போடும் குணம் குறைந்து விடுகிறதாம். அந்தச் சமயத்தில் அது அதிகமாக முட்டையிட ஆரம்பிக்கிறதாம். அதேநேரத்தில் இரைஎடுப்பதைக்கூட குறைத்துக் கொள்கிறதாம். இது ஏன் இப்படி செய்கிறது என்று விஞ்ஞானிகளுக்கே இன்னும் புரியவில்லையாம். எப்படியோ அமெரிக்க கோழிகளெல்லாம் '(Contact lens)' பொருத்திக் கொள்ள ஆரம்பித்தாயிற்று.

கோழியின் கழுத்தைப் பிடித்துக் கொண்டு ஒரு சில விநாடிகளில் அதைப் பொருத்திவிடுகிறார்களாம். கோழியின் ஆயுள் முழுவதும் அப்படியே இருக்குமாம். பண்ணையில் முட்டை உற்பத்தி குறைந்தால் இதுபோன்று விஞ்ஞானபூர்வமாகபரிகாரம்தேடுவதுதான்நல்லது. எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தர் ஒரு கோழிப்பண்ணை வைத்திருந்தார். அந்தப்பண்ணையில் அரைவாசிக் கோழிகள் திடீரென இறந்து விட்டன.

உடனே ஒரு கால்நடை வைத்தியரிடம் போக வேண்டியது தானே... அங்கே போகவில்லை. உள்ளூர் சாமியாரிடம் போய் அவரது காலில் விழுந்தார். "சாமி, என் 'பண்ணையில் அரைவாசிக் கோழிகள் இறந்து விட் டன. அதற்கு பரிகாரம் தேடி வந்தேன் என்றார். சாமியார் யோசித்தார்.

"பண்ணையில் வாசல்படி கிழக்கு பக்கமாக இருக்கிறதா? மேற்குப் பக்கமாக இருக்கிறதா?" என்று கேட்டார். "கிழக்குப்பக்கமாக இருக்கிறது" என்றார் அவர். "அப்படியானால் அதை மேற்குப் பக்கமாக மாற்று சரியாகிவிடும்"

என்றார். இவரும் சரியென்று சொல்லிவிட்டு போனார்.

அதேமாதிரி செய்தார். ஆனால் மறுபடியும் அரைவாசிக் கோழிகள் இறந்து விட்டன. அவர் மறுபடியும் இவரைத்தேடி வந்து "என்ன சாமி, இப்படி ஆகிவிட்டதே" என்றார். "அதுசரி பண்ணையில் கூரைக்கு ஓடு போட்டிருக்கிறாயா? சீற் போட்டிருக்கிறாயா?" என்று கேட்டார். "ஓடு போட்டிருக்கிறேன்" என்றார்.

"அப்படியானால் அங்கே தென்னோலையைப் போடு சரியாகப் போய்விடும்" என்றார். "சரி" என்று போனார். அதையும் செய்தார். மறுபடியும் அரைவாசிக் கோழிகள் இறந்து விட்டன. திரும்பவும் வந்தார்.

இப்படி நாலைந்து தடவை மாற்றி மாற்றி யோசனை சொன்னார். அவரும் செய்து பார்த்து விட்டு ஆறாவது தடவையாக இவரைத் தேடிக் கொண்டுவந்தார். அந்த சமயத்தில் இவரும் தீவிரமாக யோசனை செய்து பார்த்துவிட்டு, "அது சரியப்பா, நீயும் என்னிடம் சளைக்காமல் வந்து கொண்டிருக்கிறாய் பரவாயில்லை. சொல்வதற்கு என்னிடம் யோசனைகள் நிறைய இருக்கிறது. ஆனால் சோதிப்பதற்கு உன்னிடம் கோழிகள் இல்லையே. என்ன செய்வது?" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# திருமலையின் நிலாவெளி கடற்பரப்பை சுற்றுலா வலயமாக மாற்ற நடவடிக்கை

திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளி கடற்பரப்பை சுற்றுலா வலயமாக மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனடிப்படையில் வீரக்கண்டி முதல் தலப்பையாறு வரையான கடற்பிரதேசம் சுற்றுலா வலயமாக அறிவிக்கப்பட்டு உள்ளதுடன் அதற்கான விசேட வர்த்தகமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பிரதேசத்தில் அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது மக்கள் காட்டிய எதிர்ப்பு காரணமாக அந்த பணிகள் கடற்படையினருக்கு வழங்கப்பட்டு அவர்கள் அளவீட்டுப்பணிகளை நிறைவு செய்துள்ளனர்.

வீரக்கண்டி முதல் தலைப்பையாறு வரையான பகுதிகளில் வாழ்ந்த மீனவர்களை புல்மோட்டைக்கு அருகில் உள்ள திரியாய் பிரதேசத்தில் குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரியாய் பிரதேசத்தில் இருந்து பல கிலோமீற்றர் தூரம் சென்று தொழிலில் ஈடுபட வேண்டியிருப்பதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் மீன்பிடி தொழிலும் பெரும் நெருக்கடிகளை சந்திக்கும் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் குறித்த பிரதேசத்தில் இருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் உள்ளூராட்சி சபைத் தேர்தல் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் தேர்தலின் பின்னர் மக்களை பிரதேசத்திலிருந்து வெளியேற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (ஸ்ரீ)

# அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

தில்லடி அகதிகள் முகாம் என்னும் முகவரியை சேர்ந்த நெயினா மொகமட் அஜித் என்பவருடைய 590750296V என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், கிளிநொச்சி வட்டக்கச்சி சில்வா வீதி எனும் முகவரியை சேர்ந்த நாகேஸ்வரன் நந்தகுமார் என்பவருடைய 812244698V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், கொழும்பு-6, லில்லி மாவத்தை எனும் முகவரியைச் சேர்ந்த இலட்சுமி சத்திய நாதன் என்பவரு டைய 366391681V எனும் இலக் கமுடைய தேசிய அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

எனவே உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். (ஸ்ரீ-9)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி, ஆகிய வலயங்களைச் சேர்ந்த க.பொ.த (உயர்தரம்) தமிழ்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும்.

எனவே சம்பந்தப்பட்ட அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 230 | 240 |
| உருளைக்கிழங்கு | 45 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 240 | 300 | 300 |
| தக்காளி | 120 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 |
| கோவா | 90 | 80 | 100 |
| கரட் | 100 | 120 | 150 |
| பூசணி | 50-60 | 50 | 80 |
| புடோல் | 70 | 100 | 140 |
| வாழைக்காய் | 40 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150-180 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 45 | 70 | 90-100 |
| பாகற்காய் | 80 | 130 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | - | 60 | 80 |
| பயற்றங்காய் | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 140 | 160 |
| பீற்றூட் | - | 130 | 140 |
| கறிமிளகாய் | - | 250 | 240 |
| போஞ்சி | 120 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 170 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 10-15 | 30 | 30 |
| தேசிக்காய் | 30-40 | 50 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 |

# இராசி பலன்

*18.02.2011*
*(மாசி 6, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு*
*பூரணை பிற்பகல் 2.48 மணிவரை*
*மகம் பின்னிரவு 4.18 மணிவரை*
*இராகுகாலம் 11.02-12.32 மணிவரை*
*சுபநேரம் 6.32-8.02 மணிவரை*
*பூரணை விரதம், மாசி மகம்*

**மேடம்** சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், ஆலய வழிபாட்டில் ஆனந்தம் கிடைக்கும்.



**இடபம்** அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல் வந்து சேரும், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், முருகப் பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும்.



**மிதுனம்** குடும்பத்தில் சிலரை திருப்திப் படுத்துவதற்காக சில பொறுப்புக்களை எடுக்க வேண்டிவரலாம், வளமான நாள், எடுத்த காரியம் திருப்திகரமாக அமையும்.



**கடகம்** நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.



**சிங்கம்** குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கலாம், திடீர் பயணம் இடம் பெறலாம், கற்பனைகள் கூடும், பெரியோர் சந்திப்புண்டு, போசனசுகமுண்டு.



**கன்னி** அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயம் கிடைக்கலாம், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும்.



**துலாம்** பண வரவு அதிகரிக்கலாம், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள், போட்ட திட்டங்கள் நிறைவேறும்.



**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குறையில் நின்றபணிகளை மீண்டும் தொடர்வீர்கள்.



**தனுசு** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டம் வகுப்பீர்கள்.



**மகரம்** கணபதி வழிபாட்டால் துயரங்கள் தீரும் நாள், உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும் நாள், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது.



**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், கௌரவமான நாள்.




**மீனம்** உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும், எடுத்த கருமங்கள் எளிதில் நிறைவேறும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உற்சாகமான நாள்.



வளவன்






யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் கே.சுதாகரனின் 'இலங்கை வரலாறு' நூல் வெளியீட்டு விழா யா/மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதனையும் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத்தலைவர் ப.புஷ்பரட்ணம் நூலை வெளியிட்டு வைப்பதனையும் அருகில் நூலாசிரியர் நிற்பதையும்படங்களில்காணலாம்

# ஆண்களுக்கான கபடிப்போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணி சம்பியன்

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்த விளையாட்டு கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கபடிப் போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணி சம்பியனாகியது.

இப்போட்டி நேற்று காலை கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் கம்பர்மலை யங்கம் பன்ஸ் அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் அணி 47:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. (ஸ்ரீ-3-24)




## பொதுக்கூட்டம்

கல்லிகைக்கந்தன் ஆலய பரிபாலன சபை பொதுக்கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு கரவெட்டிப்பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. மேற்படி பொதுக்கூட்டத்திற்கு பிரதேச செயலாளர் பிரிவினால் அனுப்பப்பட்ட கடிதங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(ஸ்ரீ-3-24)

## மகஜர் கையளிப்பு

(அல்வாய்)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் தமது சொந்தக் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பாக நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளனர்.

அதேவேளை யாழ்.போரூட் நிறுவன முகாமைத்துவ குழுவும் மேற்படி சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-19)

## இரத்ததான நிகழ்வு

இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தின் 9 ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் பொது நூலக கலாசார மண்ட பத்தில் இரத்ததான நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே இரத்ததானம் செய்ய விரும் பும் அபிமானிகள் அன்றைய தினம் வருகை தந்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ-3)

## சதுரங்கப்போட்டி

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலை மாணவருக்கான பெருவிளையாட்டுக்களில் சதுரங்கப்போட்டி எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளில் யா/ஹாட்லிக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆண்களுக்கான போட்டி இடம் பெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 8.30 மணிக்கு பெண்களுக்கான போட்டி இடம்பெறுமென வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வக்குமரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## ஆங்கிலதினப் போட்டி

வடமராட்சி வலயத்தில் உள்ள மூன்று கோட்டங்களுக்குமான ஆங் கில தினப்போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 5,6ஆம் திகதிகளில் அவ்வவ் கோட்டங்களில் நடைபெறவுள்ளது.

இதில் ஆங்கிலமொழி மூலம் பாவோதல், பார்த்து எழுதுதல், ஆக்கச் செயற்பாடு, சொல்வதெழுதல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.இதற்கான விண்ணப்படிவங்களை எதிர்வரும் 23ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னர் கோட்டக்கல்வி அலுவலகங்ளகளுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ-3-19)

# பொருட்கணக்கெடுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் வருடாந்த பொருட்கணக்கெடுப்பை எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் மேற்கொண்டு உரிய அறிக்கைகளை வடமராட்சி வலய கணக்காளருக்கு அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

இக்கணக்கெடுப்பின் ஒரு பிரதி வடமாகாண கணக்காய்வுத் திணைக்களத்திற்கு வலயக்கல்வி அலுவலகத்தினால் இம்மாத முடிவுக்குள் அனுப்பி வைக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கணக்கெடுப்பை திறமையாக செய்வதற்கு கணக்கெடுப்பு சபைக்கு சகல உதவிகளையும் நல்குமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களை அவர் கேட்டுள்ளார்.

மேலும் கணக்கெடுப்பு நடைபெறும் காலத்தில் மற்றைய எல்லாப் பணிகளைக் காட்டிலும் இக்கணக்கெடுப்புப் பணிக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு

இலங்கை நூலகச் சங்கத்தினால் நடத்தப்படும் நூலகத்தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 இற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை நடைபெறவுள்ளது.

மேற்படி கற்கைநெறிக்கு க.பொ.த(உ/த) பரீட்சையில் சித்தி அல்லது உயர்கல்வித் தகைமைகள் அல்லது க.பொ.த(சா/த) பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நூலகம் ஒன்றில் மூன்று வருட தொழில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறிக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் மேற்படி நேர்முகத் தேர்வுக்கு உரிய ஆவணங்களுடன் தோற்ற முடியுமென இலங்கை நூலகச் சங்க யாழ்.நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி. கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## மெய்வல்லுநர் போட்டிகள்

யா/கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் தனபாலசிங்கம் ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிறப்பு விருந்தினராக நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் க.முரளிதரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

*****

யா/கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வேல்ட்விசன் நிர்வாக வளங்கள் இணைப்பாளர் திலகநாயகம் போல் பிரியவத்சலன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

(யாழ்ப்பாணம்)

வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வதிரி டயமன்ஸ் மைதானத்தில் அதிபர் ப. செல்வவிநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் த. தபேந்திரராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பரிசில்களை திருமதி மதிவதனி தபேந்திரராஜா வழங்கிக் கௌரவிப்பார். (ஸ்ரீ-3)

*****

(நவாலி)

நவாலி மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு அதிபர். இரா.வசந்தகுமார் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.கந்தசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவர் சங்க உபதலைவர் கே.திருஞானசம்பந்தர், டாக்டர் எஸ்.சுந்தரராஜன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-26)

**********

இராமாவில் நலன்புரி நிலையத்தில் அமைந்துள்ள வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் த.செல்வக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக 523 ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் டபன் டெமன்ரன் பிட்டியா, வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராஜா,தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன், ஜே.ஆர். எஸ்.யாழ். இயக்குநர் வணபிதா எட்விட் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-19)



அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் விஜயம் செய்தபோது பாடசாலை அதிபர் ஷிராணிமில்ஸ்ஸ்ரீடன் உரையாடுவதனையும் படங்களில் காணலாம்.

# எகிப்தைப் போன்று ஆர்ப்பாட்டம் நடத்த முயற்சிப்பின் துப்பாக்கிதான் பதில் சொல்லும்

## அமைச்சர் மேர்வின் எச்சரிக்கை



(கொழும்பு)

எகிப்தைப் போன்று இலங்கையிலும் ஆட்சி மாற்றம் கோரி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றால் எனது கைத்துப்பாக்கிதான் அவர்களுக்கு பதில் சொல்லும் என்று அமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்கமாக எச்சரித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்களை இணைத்துக் கொண்டு இலங்கையில் ஆட்சி மாற்றம் கோரி யாராவது ஆர்ப்பாட்டங்கள் நடாத்த முயன்றால் தனது கைத்துப்பாக்கியின் குண்டுக்கு அவர்கள் பலியாக நேரிடும் என்று அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் தேவைக்கும் அதிகமாக ஜனநாயகம் இருப்பதாக குறிப்பிட்ட அவர் பேரணிகள், நடத்த அரசாங்கத்துக்கு எதிராக கருத்துக்கள் தெரிவிக்க, வேலை நிறுத்தங்களில் ஈடுபட அரசாங்கத்தை விமர்சிக்க என அனைத்து வகையான சுதந்திரமும் இருப்பதாக வலியுறுத்தியுள்ளார்.

அப்படியான சூழ்நிலையில் அதற்கு மேலதிகமாக வேறு என்னதான் தேவை என்று கேள்வியெழுப்பிய அவர் அரசாங்கத்துக்கு எதிராக சதி செய்ய முயன்றால் முதலாவது குண்டு தனது கைத்துப்பாக்கியிலிருந்தே தீர்க்கப்படும் என்று பகிரங்கமாக எச்சரித்துள்ளார். (ஸ்ரீ)

## திருநகர் வடக்கிற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை

### பொதுமக்கள் விசனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரையண்டிய திருநகர் வடக்கிற்கு மின்சாரம் வழங்கப்படவில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

திருநகர் வடக்குப் பகுதியினூடாகவே திருநகர் தெற்கு, ஜெயந்திநகர் ஆகிய பகுதிகளிற்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளபோதும் திருநகர் வடக்குப் பகுதிக்கு இதுவரையில் மின்சாரம் வழங்கப்படவில்லையென பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இது விடயத்தில் உரிய கவனம் செலுத்தி செயற்படுமாறு அம்மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

(ஸ்ரீ-3-30)

# யுத்த காலத்தில் வட-கிழக்கு தமிழ் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கினர்

## அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

யுத்த காலத்தில் வட- கிழக்கில் தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் படையினராலும் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டு வந்தனர். ஆனால் தென்பகுதியில் எந்த விதப்பாதிப்பும் ஏற்படவில்லை என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சர்வோதய கல்வி நிலையத்தில் இடம்பெற்ற தொழில் கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ் மற்றும் தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் -முஸ்லிம்-சிங்கள மக்கள் ஒரு போதும் பிரிந்து வாழ முடியாது என்பதை கடந்த கால சம்பவங்கள் எங்களுக்கு உணர்த்தின. நாங்கள் கடந்தகால யுத்தம் மூலம் அடைந்தது என்ன, எமது படிப்பிற்கு என்ன நடந்தது-எமது வைத்தியசாலைக்கு செலவளிக்க வேண்டிய பணத்தை யுத்தத்திற்கு செலவு செய்தோம்- கல்விக்கு செலவழிக்க வேண்டிய பணத்தை யுத்தத்திற்கு செலவு செய்தோம்- வீதிகளை -குளங்களைபுனரமைக்க வேண்டியபணத்தை இந்த யுத்தத்திற்கு செலவு செய்தோம்.

யுத்தத்தின்மூலமாக நாங்கள் கோடிக் கணக்கான சொத்துக்களை இழந் தோம்- கோடிக்கணக்கான பணத்தை இழந்தோம்-ஆயிரக் கணக்கான மனித உயிர்களை இழந்தோம். இதனால் நாம் அடைந்தது எதுவும் இல்லை. ஆகவே இன்றும் நாங்கள் ஒரு வறிய நாடாக இருக்கிறோம். இன்று நமது பிள்ளைகளில் 15-16 பேருக்கு போசாக்கு இல்லாதநிலையே உள்ளது. நாம் இந்தியாவில் இருந்து வந்த தமிழ்- சிங்கள சமூகத்துடன் ஈராக்-ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து வந்த முஸ்லிம் மக்களுடனும் கலந்து இன்று இந்த நாட்டில் மூவினமாகவுள்ளோம்.

கடந்தகால யுத்தத்தில் வட -கிழக்கில் உள்ள தமிழ்மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் படையினராலும் துன்புறுத்தல்களுக்குள்ளாகினர். ஆனால் தென் பகுதியைச் சேர்ந்த மக்கள் எந்தவிதப்பாதிப்பு மற்றவர்களாக இருந்தனர்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக கடும் பொருளாதா நெருக்கடியைக் கொண்டுள்ள நாடு என்ற வகையில் நாங்கள் துவண்டுவிடாமல் -இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பான் அழிந்து அது எவ்வளவு விரைவாக மீள் உருவாக்கம் பெற்றதோ அது போன்று நாமும் மீள் உருவாக்கம் பெற வேண்டும் என்றார்.

(ஸ்ரீ-2)


**The Open University of Sri Lanka**

Applications are called for
**B.Sc. Degree Programme**

**Entry requirements:**
- 3 passes in A/L Science, in any number of sittings
- Less than 3 passes: start from our Foundation Courses in Science

**Application forms:**
Available from : 08.02.2011 to 12.03.2011
Could be collected from: Open University of Sri Lanka – Jaffna Regional Centre, Browns Road, Kokuvil

**Closing date of receiving applications:**
**12th of March 2011**

(3834)

**Open Day (Free Seminar)**
**- all are welcome**
At the Jaffna Regional Centre
On 19th of February 2011

Further details:
Coordinator,
Jaffna Regional Centre
Tel.021 222 3374
Email: adjaf@ou.ac.lk



யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று முன்தினம்
"மனிதநேய ஈகையாளன்"
எனும் கௌரவம் பெற்ற
திரு.இ.ச.பேரம்பலம் நாகரெத்தினம்
அவர்கள் தொடர்ந்தும்
கல்விச் சமூகத்தினருக்கும்
நலிவிழந்தோருக்கும்
அரும்பெரும் தொண்டாற்ற
வேண்டுமென எல்லாம் வல்ல
விஷ்ணுவை வேண்டி
நாமும் அவரை வாழ்த்தி
மகிழ்கின்றோம்.

யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்
பாடசாலைச் சமூகம்.

(2462)



கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கண்டாவளைக் கோட்ட உலக உணவுத் திட்ட இணைப்பாளர் ச.பிரதீபன் மாணவரொருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: வட்டக்கச்சி செய்தியாளர்)*

# பொருட்களின் விலையேற்றத்தினால் நுகர்வுத் தன்மையில் மாற்றம்

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

பொருட்களின் விலை உயர்வினால் மக்கள் குறைந்தளவு உணவை உட்கொண்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பணவீக்கம் குறைவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி புள்ளி விபரத் தரவுகளை வெளியிட்ட போதிலும், உண்மையில் நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஊட்டச்சத்துக்கள் குறைவான போசாக்கற்ற உணவு வகைகளை உட்கொள்வதுடன், உணவுக்காக எடுத்துக்கொள்ளும் உணவுப் பொருட்களின் அளவும் வீழ்ச்சியடைந்துள்ளதெனவும் கடந்த சில காலமாக நுகர்வோரின் பொருட்பட்டியலில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் பொருட்களின் விலையேற்றத்தினால் பொருட்களின் நுகர்வுத் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இந்தியாவிற்கு புனித யாத்திரை சென்ற இரண்டு இலங்கைப் பெண்கள் மரணம்

இந்தியாவிற்குப் புனித யாத்திரை சென்ற இரண்டு இலங்கைப் பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

பீகார் மாநிலத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. 31 வயதான டபிள்யூ.ரணவதி என்ற பெண் புத்தகயா மாவட்டத்தில், கும்கேஸ்வரி மலையில் ஏறிக்கொண்டிருந்தபோது, கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

இதேவேளை நாலந்தா மாவட்டத்தின் ராஜ்க்ரீஜ் பிரதேசத்திலுள்ள புனித மலையொன்றில் ஏறிக்கொண்டிருந்த 76 வயதான வீரமுடி நீலகே என்ற வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளார். மூச்சுத் திணறல் ஏற்பட்டு இந்த வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளதாக பீகார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு பெண்களின் சடலங்களும் புத்தகயாவில் உள்ள இலங்கை மகா போதி சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்த மரணங்கள் குறித்து டில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இரண்டு பெண்களுடன் 50 பேர் கொண்ட இலங்கைக் குழுவினர் இந்தியாவுக்கு யாத்திரை சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஒரே நபரின் ஆறு திருமணங்களை பதிவு செய்த பதிவாளர் பணிநீக்கம்

ஒரே நபரின் ஆறு திருமணங்களைப் பதிவுசெய்த விவாகப் பதிவாளர் ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். ஏழு வருடங்களுக்குள் இந்த ஆறு திருமணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்டச் செயலாளர் டீ.பீ.ஜீ.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

வலப்பனைப் பிரதேச விவாகப் பதிவாளர் ஒருவரே குறித்த நபரின் ஆறு திருமணங்களையும் பதிவு செய்துள்ளதாகத் தெரிவித்த அவர், இது தொடர்பிலான அறிக்கையைப் பிரதேச செயலர் அனுப்பி வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலும் செப்டம்பர் மாதத்திலும் குறிப்பிட்ட நபருக்கு இரண்டு திருமணங்கள் செய்து வைக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது. இந்தத் திருமணங்களைப் பதிவு செய்த விவாகப் பதிவாளரைப் பணிநீக்கம் செய்யும் ஆவணத்தில் கையொப்பமிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆடைத் தொழிற்சாலைகள் சிலவற்றில் பணியாற்றிய பெண்கள் ஊழிய சேமலாப நிதியக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட நபரைத் திருமணம் செய்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இரு ரோமானியர்கள் பொலிஸாரால் கைது

இலங்கையில் கடனட்டை மோசடியில் ஈடுபட்டு வந்த இரண்டு ரோமானிய நாட்டுப் பிரஜைகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாட்டின் பல பாகங்களிலும் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரத்தின் ஊடாக மோசடிகளில் ஈடுபட்ட நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் சில தினங்களுக்கு முன்னர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடனட்டை மோசடியில் ஈடுபடுவதற்கு மேலும் இரு ரோமானியப் பிரஜைகள் இலங்கை வந்துள்ளனர் என அவர் வழங்கிய தகவலை அடுத்து குறித்த இரு ரோமானியப் பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிகவும் நுட்பமான முறையில் பலரது வங்கிக் கணக்குகளிலிருந்து பணம் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சிவனொளிபாதமலையைத் தரிசிக்கும் வெளிநாட்டவரின் தொகை அதிகரிப்பு

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை சிவனொளிபாத மலையைத் தரிசிக்க வரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

பெருமளவு உள்ளூர் அடியார்களும் சிவனொளிபாதமலைக்கு வருகை தந்துள்ளதாக அந்தப் புனித தலத்துக்குப் பொறுப்பான பௌத்த மதகுரு தெரிவித்துள்ளார்.

தற்போதைய விடுமுறை நாட்களைத் தொடர்ந்துவரும் வார இறுதி நாட்களிலும் கூடுதல் அடியார்கள் சிவனொளிபாதமலை ஏறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஸ்ரீ-9)

## தமிழ் — சிங்கள மாணவர்களுக்கு

# வரலாற்றுப் பாடம் இரண்டுவிதமாக கற்பிக்கப்பட்டு வருகின்றது

## தேசிய ஆசிரியர் சபை சுட்டிக்காட்டு

இலங்கைப் பாடசாலைகளில் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் கற்கும் தரம் 6 மாணவர்களுக்கு நாட்டின் வரலாறு இரண்டு விதமாகக் கற்பிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய ஆசிரியர் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தரம் 6 சிங்கள வரலாற்றுப் புத்தகத்தில், துட்டகைமுனு மன்னனின் 10 மாபெரும் வீரர்கள் குறித்த வரலாறு, தமிழ் வரலாற்றுப் புத்தகத்தில் முற்றாக நீக்கப்பட்டுள்ளன என தேசிய ஆசிரியர் சபைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நிமால் சோமவங்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை தரம் 10 தமிழ் வரலாற்றுப் புத்தகத்தில் இலங்கையின் 68 பண்டையகாலக் குடியிருப்புகள் தொடர்பான தகவல்கள் முற்றாக நீக்கப்பட்டுள்ளன.

கல்வி அதிகாரிகளின் கவனமின்மை காரணமாகவே இலங்கையின் வரலாறு இரண்டு விதமாக மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் ஆய்வுகளின் போது, இலங்கையில் 68 பண்டையகாலக் குடியிருப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. எனினும் தமிழ் வரலாற்றுப் புத்தகத்தில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டில் பூர்வீகக் குடிகள் வசிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜயந்தி



*யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி இந்துமாமன்றம் நடாத்தும் பெருவிழா இன்று 18.02.2011 அதிபர் திரு. மு. மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.*

*கல்லூரி மாணவர்களின் நிகழ்வை அடுத்து சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்துப் பதிப்பகத்தின் நூற்றாண்டு வெளியீடு ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள் 3 பாகங்களை சுவாமி சித்ரூபானந்தா (பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்), அதிபர் திரு. மு. மகேந்திரனிடம் கையளித்து ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு அபூர்வ மனிதர் என்ற தொடரில் உரை நிகழ்த்துவார்.*

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.

செயலாளர்
வ.பிரசன்னா

(சி-2465)


# தேர்தல் வன்முறைகளைக் கைவிடுமாறு கண்காணிப்புக் குழுக்கள் கோரிக்கை

(கொழும்பு)

வன்முறைகளைக் கைவிடுமாறு தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதுவரையில் இடம்பெற்ற அதிகளவான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் ஒரே கட்சி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு இடையில் அதிகளவு இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அதிகளவு விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸாரினால் மட்டும் தேர்தல் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பான பல வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் உடனடியாக இதற்குத் தீர்வு காணமுடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் அதிகளவு மோதல்கள் இடம்பெற்று வருவதாக கபே கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# மாசி மாத இராசி பலன்கள்




(சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள் வரை)

**விரயங்களைத் தவிர்க்க விழிப் புணர்ச்சி தேவை**

துவளாத மனத்தோடு செயலாற்றி தொட்ட காரியத்தில் வெற்றியை வரவழைத்துக் கொள்ளும் துலாம் ராசி நேயர்களே!

வாழ்ந்தால் வசதியோடு வாழவேண்டுமென்று அடிக்கடி சொல்பவர்கள் நீங்கள். எந்த ரகசியத்தையும் காப்பாற்ற தெரியாது. யாரேனும் உங்களைப் புகழ்ந்து சொன்னால் போதும். ரகசியங்களை வெளியில் சொல்லிவிடுவீர்கள். பழைய குடும்பப் பெருமைகளையும், தங்கள் முன்னோர்கள் செய்த சாதனைகளையும் எடுத்துரைப்பதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை.

மாசி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சகாஸ்தானத்தில் ராகுவும், 9இல் கேதுவும், சஞ்சரிப்பதாலும், ஏழரைச்சனியில் ஆதிக்கம் இருப்பதாலும் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. இனம்புரியாத கவலை மேலோங்கும். எவரையும் விமர்சித்து, வீண்பழிகளை ஏற்றுக்கொள்ள வேண்டாம். சுலபமாகக் காரியங்கள் முடிய வேண்டுமானால் சுற்றியிருப்பவர்களை அனுசரித்துச் செல்லவேண்டியது அவசியமாகும்.

விரயச்சனி வக்ரம் பெறுவதால், குடும்பத்தில் திடீர் விரயங்களைச் சந்திக்க நேரிடலாம். உறவினர் வழியில் மனக் கசப்பு தரும் செய்தி வந்து சேரும். சமயோசிதமாக செயல்பட்டு தக்க விதத்தில் வாழ்க்கைத் தேவையை அமைத்துக் கொள்வது உங்கள் புத்தி சாலித் தனமாகும். உத்யோகம், தொழிலில் .வரும் மாற்றங்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது. சுயஜாதக ரீதியாக அறிந்து செயல்பட்டால் சொல்லைச் செயலாக்கிக் காட்ட இயலும்.

2, 7க்கு அதிபதியான செவ்வாய் பெப்ரவரி 13ஆம் திகதி கும்ப ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 5இல் சஞ்சரிக்கும் செவ்வாயில் பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி வைப்புநிதியை வங்கியில் சேர்ப்பீர்கள். மாமன், மைத்துனர் வழியில் இதுவரை கிடைக்காத ஒத்துழைப்பு இப்பொழுது கிடைக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேர்வர். தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர். முருகப் பெருமான் வழிபாடு முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

பெப்ரவரி 25ஆம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். அஷ்டமாதிபதி 5இல் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகும். குறிப்பாகப் பெண் குழந்தைகளின் வளர்ப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வங்கிச் சேமிப்பு சிறிது கரையும். வழிகாட்டியாக இருந்தவர்கள் எதிரியாக மாறலாம். இக்காலத்தில் வரவைக் காட்டிலும் செலவு கூடும். எனவே வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட் களை வாங்கி மகிழ்வது நல்லது.

மார்ச் 2ஆம் திகதி மீன ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 12க்கு அதிபதி நீச்சம் பெறுவது நன்மைதான். அதேநேரத்தில் 9ஆம் இடத்திற்கும் அதிபதியாக புதன் விளங்குவதால் குடும்பப்பிரச்சினை அதிகரிக்கும். வழிபாடுகளை வைத்துக் கொண்டால், வளர்ச்சியில் எந்த விதமான இடை யூறுகளும் ஏற்படாது.

பொதுவாக இம்மாதம் புதிய திருப்பங்களை வரவழைத்துக் கொள்ள நவக்கிரக வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். விரயச்சனியால் நன்மை ஏற்பட காகத்திற்கு சோறிடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் சனியின் சஞ்சார பலம் அதிகரிப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறையோசித்துச் செய்வது நல்லது. குடும்பத்தில் கணவன்-மனைவி ஒற்றுமை பலப்பட அனுசரிப்புத்தன்மை அவசியம் தேவை. குடும்ப பெரியவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் எந்த முடிவும் எடுக்க வேண்டாம். குழந்தைகள் உங்கள் சொல்பேச்சுக் கேட்காமல் நடந்து கொள்கிறார்களே என்று நீங்கள் கவலைப்படுவீர்கள். உங்கள் பெயரில் வாங்கிய சொத்துக்களை விற்கநேரிட்டாலும், மீண்டும் வாங்கும் சூழ்நிலை உருவாகும். சுயஜாதகத்தில் தெசாபுத்திக்கேற்ற வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.




(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை)

**வாய்ப்புகள் வாயில் தேடிவரும்!**

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற எண்ணத்தைச் செயலாக்கச் சொல்லும் விருச்சிக ராசி நேயர்களே!

விரைவில் வி.ஐ.பி.க்களாக மாற வேண்டும் என்று விரும்புபவர்கள் நீங்கள். ஆன்மிகத்தில் அதிக ஆர்வம் காட்டும் பொழுதுதான் வாழ்க்கை உங்கள் வசமாகிறது என்பதை அறிந்து கொள்வீர்கள். சகல கலைகளையும் தெரிந்து வைத்திருப்பீர்கள். சாப்பிடுவதில் கூட அதிக அக்கறை காட்ட மாட்டீர்கள். வாய்ப்புகள் வரும்பொழுது அதை உபயோகப்படுத்திக் கொள்வதுதான் கெட்டிக்காரத்தனம் என்று எடுத்துரைப்பீர்கள்.

உங்களுக்கு இந்த மாசிமாதம் வளர்ச்சி அதிகரிக்கும் மாதம் என்று தான் சொல்ல வேண்டும். கொடுக்கும் விதத்தில் கோதண்ட ராகு சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை பலம் காரிய வெற்றிக்கு உறுதுணை புரியப்போகிறது. லாப ஸ்தானத்தில் சனி உலா வருகிறார். அதன் பிறகு வருமானம் போதுமான அளவு வந்து சேரும். வாய்ப்புகள் வாயிற் கதவைத் தட்டும். பெருமைக்குரியவர்கள் பின்னணியாக இருந்து ஒத்துழைப்புச் செய்வர்.

புத-ஆதித்ய யோகம் இருப்பதால் மதிப்பும், மரியாதையும் உயரும். மாற்று இனத்தவர்கள் உங்களின் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்புச் செய்வர். எண்ணங்களை எளிதில் செயலாக்க, எப்பொழுதும். விக்னேஷ்வரரையும், முருகப் பெருமானையும், சனீஸ்வரரையும், சர்வேஸ்வரரையும் வழிபட்டு வருவது நல்லது.

பெப்ரவரி 13ஆம் திகதி கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் 4இல் சஞ்சரிக்கும் போது சொத்து விற்பனையால் தனலாபம் கிடைக்கும். பழைய சொத்துக்களைக் கொடுத்துவிட்டு புதிய சொத்துக்களை வாங்கும் முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். உடன்பிறப்புக்கள் அனுகூலமாக நடந்து கொள்வர். தொழில் வளர்ச்சிக்கு போது மான மூலதனம் கிடைக்கும். கவுரவப் பதவிகள் தேடிவரும். மற்றவர்களிடம் நம்பி ஒப்படைத்த பொறுப்புகளை முறையாக முடித்துத்தருவர். அதன் மூலம் ஓர் ஆதாயம் காண்பீர்கள். கிரிவலம் வருவதன் மூலமும், கேட்ட வரங்களைத்தரும் தெய்வங்களை வழிபடுவதன் மூலமும் வளர்ச்சியை அதிகரித்துக் கொள்ளலாம்.

பெப்ரவரி 25ஆம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 12க்கு அதிபதி 3இல் சஞ்சரிப்பது யோகம்தான். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்குவரும். பணியாளர்கள் பக்குவமாக நடந்து கொள்வர். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும்.

## சிவல்புரி சிங்காரம்

தொழில் வியாபாரத்தில் இதுவரை இணைந்திருந்த கூட்டாளிகள் உங்களிடம் முழுமையாக பொறுப்பை ஒப்படைக்கலாம். இருப்பினும் தற்சமயம் கூட்டு முயற்சியை நீடித்துக் கொள்வதே நல்லது.

மார்ச் 2ஆம் திகதி மகர ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமாதிபதி நீச்சம் பெறும் இந்த நேரத்தில் அற்புதமான பலன்கள் வந்து சேரும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். நட்பு வட்டம் விரியும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

இம்மாதம் சந்திர பலம் மேலோங்கி இருப்பதால் பௌர்ணமி கிரிவல வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிவன் வழிபாடு உங்களுக்கு செல்வ வளத்தை பெருக்கிக் கொடுக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் இதயம் மகிழும் சம்பவங்கள் ஏராளமாக நடைபெறப் போகிறது. சந்திர பலம் கூடுவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழிலில் உங்கள் பெயரையும் இணைத்து செயல்படத் தொடங்கும் வாய்ப்புகள் வந்து சேரும். குடும்பப் பெரியவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உறவினர்கள் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக விளங்குவர். பெப்ரவரி 25க்கு மேல் தங்கம், வெள்ளி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குலதெய்வ வழிபாடு முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். மாதக் கடைசியில் மங்கல நிகழ்ச்சி நடைபெறுவதற்கான வழி பிறக்கும்.

# மாசி மகத்தின் தனிச்சிறப்பு

வருடந்தோறும் மாசிமாதத்தில் மக நட்சத்திரமும் பௌர்ணமித்திதியும் கூடிவரும் நாள் மாசிமக உற்சவ புண்ணிய காலமாகக் கொண்டாடப்படுகின்றது. இத்தினம் கும்பகோணத்தில் கும்பமேளா எனும் பொருவிழாவாகவும் தீர்த்த உற்சவ நன்நாளாகவும் கொண்டாடப்படுகின்றது.

## இன்று மாசிமகம்

பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை மாசிமகமும் பௌர்ணமியும் வியாழ பகவான் சிங்கராசியில் நிற்கவும் வரும் புண்ணிய தீர்த்ததினம் மகாமகம் எனச் சிறப்பாக போற்றிக் கொண்டாடப்படுகின்றது.

மாசிமக நன்நாள் சிறப்புப் பெற்ற வரலாறு, கீழ்க்காணும்கதையினூடு கூறப்பட்டு வருகிறது.

முன்னொரு காலத்தில் பிரளைய காலம் வந்த போது, உலகம் முழுதும் அழிந்து விட்டால் படைத்தல் தொழிலை எப்படிச் செய்வது எனத்துன்புற்ற பிரமா சிவபிரானிடம் முறையிடவும், எம்பெருமான் படைப்பிற்குரிய விதத்தையும், பாதுகாக்கும் முறையையும் பிரமாவுக்கு அருளினார். இதனை அறிந்து கொண்ட பிரமா நீரையும் அமிர்தத்தையும் கலந்து மண்ணாற் குடம் செய்து நூல், தேங்காய், மாவிலை, தற்பை, பட்டுவஷ்திரம் என்பவற்றால் அலங்கரித்துக் கும்பமாக்கி சிருஷ்டி கருவினை அதற்குள் வைத்துப் பூசைசெய்து மகா மேரு பர்வதத்தின் உச்சியில்வைத்தார்.

பிரளைய காலம் வந்த போது அக்கும்பம் அடிபட்டு வந்து தென்னாட்டிற் கும்பகோணத்தில் ஒதுங்கியது. கும்பத்தில் இருந்தவையாவும் வெவ்வேறு இடங்களிற் பரவி வேறுபட்ட பல உருவங்களாய் முளைத்தன. எம்பெருமான் வேடுவவேடம் தாங்கிவந்து அம்பெய்திக் குடத்தினை உடைத்தனன். அப்பொழுது அதிலிருந்த அமிர்தம் எங்கும் பரவியது. உடைந்த குடத்தின் மண்ணை எடுத்து தமது தேகத்தை அதற்குக் கொடுத்து உருவாக்கிய மூர்த்தியே கும்பலிங்கம், கும்பேசுவரர் எனப் போற்றி வழிபடப்படுகிறது. கும்பத்திலிருந்து பரவிய அமிர்தம் தேங்கிய இடம் பொற்றாமரை வாவியாகப் போற்றப்பட்டு வருகிறது எனவும்,

ஒரு முறை நதிதேவதைகள் தங்களில் பல்லாயிரம் மக்கள் வந்து நீராடி அசுத்தம் செய்வதால், அவர்களின் குற்றம் யாவும் எம்மிற் தங்கிவிடுகின்றன எனவும் தங்கள் மாசு அகல அருள் புரிய வேண்டுமெனவும் எம்பிரானிடம் முறையிட, அவர் மாசிமக நன்நாளில் கும்பகோணம் சென்று தீர்த்தம் ஆடும்படி பணித்திடவும் நதிதேவதைகள் அவ்வாறே தீர்த்தம் ஆடி தூய்மை பெற்றதாகவும் மாசிமக நன்நாள் போற்றப்படுகின்றது.

மேலும் மாசிமக நன்நாளிலே வருணபகவானைப் பீடித்திருந்த பிரம்மஹத்தி தோஷம் நீங்க கும்பகோணத்தில் நீராடி கும்பேசுவரர் இலிங்கத்தை வழிபாடு செய்து தோஷம் நீங்கியதாகவும் புராணங்கள் சிறப்பாகக் கூறுகின்றன. இத்தகைய சிறப்புமிகு நன்நாளை திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும்

'மடலார்ந்த தெங்கின் மயிலை
யார் மாசிக்....'

என ஆரம்பிக்கும் தேவாரத்தில் போற்றிப் பாடியுள்ளார்.

சிறப்புமிகு இந்நாளில் நாமும் புனித நீராடி இறைவழிபாடுகள் செய்து நல்வாழ்வு காண்போம்.

நீர்வை மணி

## குளிக்கச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி மரணம்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் குளத்தில் குளிக்கச் சென்ற மாணவனொருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. மேற்படி சம்பவத்தில் சோலை வன்னேரிக் குளத்தைச் சேர்ந்த அர்ச்சுணன் அசோக்குமார் (வயது 19) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, வன்னேரிக்குளப்பகுதியில் உள்ள குஞ்சுக்குளத்தில் குளிக்கச் சென்ற போது குறித்த மாணவன் நீரில் மூழ்கியுள்ளார். உடனடி யாக இவரைக் காப்பாற்றி அக்கராயன்பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார். (ஸ்ரீ-3-30)

# சகலருக்கும் சொந்த வீட்டைப் பெற்றுக் கொடுப்பதே அரசின் பொறுப்பாகும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சகலருக்கும் சொந்த வீட்டைப் பெற்றுக் கொடுப்பதே மஹிந்த சிந்தனை எதிர்காலத் திட்டத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்களுக்கான சேவைகளை எத்தகைய அரசியல் அவதூறுகளுக்காகவும் நிறுத்தப் போவதில்லையென தெரிவித்த ஜனாதிபதி சகலருக்கும் வீடுகளை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் பொறுப்பாகுமெனவும் தெரிவித்தார்.

பத்து இலட்சம் வீடுகளை இலக்காகக் கொண்ட ஜன செவன வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கிருலப்பனை மிஹிந்துபுரவில் நிர்மாணிக்கப்படவுள்ள வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

மேற்படி வீட்டுத் திட்டத்திற்கான பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து நிர்மாணப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தொரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்,

தனிமனித வாழ்வை உயர்த்தி அதன் மூலம் குடும்பத்தை உயர்த்தி அதனூடாக கிராமத்தைக் கட்டியெழுப்பி அதிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதே மஹிந்த சிந்தனையின் நோக்கமாகும்.மூன்று தசாப்த காலகொடூர பயங்கரத்தை முடிவுக்குக்கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தியில் கட்டியெழுப்ப எம்மால் முடிந்துள்ளது.

போதைக்கு முற்றுப் புள்ளி வைத்து தனிநபர் வருமானத்தை அதிகரிக்கும் செயற்பாட்டிலும் நாம் வெற்றிக்கண்டுள்ளோம். நாடு சுதந்திரமடைந்த காலகட்டத்தில் ஆயிரத்து 30 டொல ராகவிருந்த தனிநபர் வருமானத்தை 2ஆயிரத்து 400 டொலராக தற்போது அதிகரிக்க முடிந்துள்ளது. இதனை இரண்டு மடங்காக அதிகரிப்பதே எமது இலக்கு.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் போது நாட்டின் ஏனைய துறைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தியது. இலவச பாடநூல் விநியோகத்திலிருந்து கர்ப்பிணித் தாய்மாருக்கான போஷாக்குப் பொதிவரை அரசாங்கம் வழங்குகிறது.

நெனசல அறிவகத்தை கிராமங்களுக்கு எடுத்துச் சென்று உலகை கிராமங்களோடு இணைக்க முடிந்துள்ளது.

அதேபோன்று வீடமைப்புத் திட்டங்களும் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களும் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மத்திய தரத்தினருக்கான வீடுகளைப் போன்றே வறுமைநிலை மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் பற்றியும் கவனம் செலுத்தவுள்ளோம்.

குடிசைகளில் குடியிருப்போர் புதிய வசதியான வீட்டிற்குச் செல்லும்போது வரும் மகிழ்ச்சி அளப்பரியது.

சேரிகளிலும் முடுக்குகளிலும் வாழ்கின்ற மக்கள் எந்நாளும் அதில் வாழவேண்டிய அவசியம் இல்லை. அந்தச் சூழலில் இருந்து ஒரு மாற்றுச் சூழலுக்கு வரும்போது அவர்களின் மனநிலையும் வாழ்க்கையும் மாற்றமடையும்.

ஜனசெவன வீட்டுத்திட்டம் சகல மக்களுக்குமான வீட்டினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்று 560 வீடுகள் கொண்ட வீட்டுத் தொகுதிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

எந்த வெளிநாட்டு நிதியும் இன்றி அரசாங்கமே முழுமையான நிதியை வழங்குகிறது. வீடமைப்பு வங்கி, வீடமைப்பு அமைச்சு மற்றும் அதன்கீழ்வரும் நிறுவனங்கள் இணைந்து இத்திட்டத்தை முன்னெடுக்கின்றன என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மீள் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு அவசியம்

## கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

மீளக் கட்டியெழுப்பும் பணிகளில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு முக்கியானது என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ் தானிகர் புருஸ் லெவி தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

உள் நாட்டு ஊடகங்கள் மீது அடக்கு முறை பிரயோகிக்கப்படுவதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களினால் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கு வெள்ள நிலைமைகள் குறித்தும் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் பாதிக்ககப்பட்ட மக்கள் தொடர்பில் கவலையடைவதாகவும் உயர்ஸ்தானிகர் அறிவித்துள்ளார்.

இலங்கையில் நீண்டகால அரசியல் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் வரவேற்கப்படவேண்டியதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ஸ்ரீ-9)

## பேஸ்புக் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

பேஸ்புக் இணையத்தளத்தின் ஊடாக துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்படுவதாக சுமத்தப்பட்டு வந்த குற்றச்சாட்டுக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குற்றச்சாட்டுக்களின் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு ஐந்து முதல் ஆறு வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படு கிறது. சில மாதங்களுக்கு முன்னர் பேஸ்புக் சமூக வலையமைப்பின் ஊடாக இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பில் நாள்தோறும் 15 தொடக்கம் 20 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக கம்பியூட்டர் எமர்ஜென்ஸீ டீம் அமைப்பு அறிவித்துள்ளது.

தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் விழிப்புணர்வு நடவடிக்கைகளினால் குற்றச் செயல்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளதென தெரிவிக்கப்படுகிறது. பேஸ் புக் இணையத்தின் ஊடாக இடம்பெற்றதாகக் கூறப்படும் 400 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தேவையற்ற செய்திகளை அனுப்புதல், கடவுச் சொல்திருட்டு ,கப்பம் கோரல், தேவையற்ற படங்களை இணைத்தல், தனிப்பட்ட படங்களை துஷ்பிரயோகம் செய்தல் போன்ற குற்றச் செயல்கள் இடம் பெற்றுள்ளதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது. குற்றச்செயல்கள் நிரூபிக்கப்பட்டால் உட்சபட்சமாக 5 ஆண்டு கால சிறைத்தண்டனையும் 3 இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்படக்கூடும் என அறிவிக்கப்பட் டுள்ளது. (ஸ்ரீ-2)



## பகிரங்க ஏலவிற்பனை

செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையம், பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள காளைமாடு ஒன்று 28.02.2011 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. ஏலத்தில் தெரிவு செய்யப்படுபவர் உடனடியாகவே முழுப்பணத்தையும் செலுத்தி நிலையத்திலிருந்து காளைமாட்டை அப்புறப்படுத்தல் வேண்டும்.

**காளைமாட்டை பார்வையிட விரும்புவோர் கிழமை நாட்களில் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணி வரை பார்வையிடலாம்.**


டாக்டர் பொ.மகாதேவன்,
கால்நடை வைத்தியர்,
செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையம்,
திருநெல்வேலி.

(சி-2459)

யா/உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வெற்றியீட்டிய மாணவருக்கு வெற்றி கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# கள்ளிக்காட்டு இதிகாசம் 43



கவிப்பேரரசு வைரமுத்து



"சின்னத்தேவரே... மொத்தம் மூணு வகைதான் மனுசமூஞ்சி. உருண்ட மூஞ்சி... சப்பட்ட மூஞ்சி... நீள மூஞ்சி. இன்ன மூஞ்சிக்கு இன்ன மீசைன்னு ஒரு கணக்கு இருக்கு. தேவர் மகன் மூஞ்சி உருண்ட மூஞ்சி. இந்த மூஞ்சிக்குக் கெடா மீசையோ முறுக்கு மீசையோதான் ஒட்டும். ஆனா ஒண்ணு- ரோமக்கட்டு இருக்கு... வளத்தி பத்தாது. ஒதுக்கி விடறேன். மூணே மாசத்துல வளந்திடும் மொசுமொசுன்னு."

வெள்ளையன் தாடையில் சோலி முடிச்சு இடது கன்னம் தாவினார்.

வெள்ளையன் மகளாத்தான் இருக்கும். பேரு முருகாயி. இன்னொரு எட்டு இப்படி வரமாட்டாளா? யாத்தே! இந்த மானங்கெட்ட மனசு உள்ள உடுக்கடிச்சு ஊரக்கூட்டுதே!

அப்பன் கழுத்துல கத்தி வைக்கிறான்... மக நெஞ்சுல அருவா வைக்கிறாளே!

பேயத்தேவர் ஒடம்பு வெள்ளையன் கட்டுப்பாட்டுல இருந்திச்சு, மனசு மக கட்டுப்பாட்டுக்குப் போயிருச்சு.

ஜல்! ஜல்! ஜல்!

முதுகுக்குப் பின்னால் திரும்பவும் அந்தக் கொலுசுச் சத்தம்! கண்ணாடிய அப்படியும் இப்படியும் ஆட்டிப் பாக்குறாரு. அகப்படல உருவம். மனசு பொறுக்காமை விசுக்குன்னு வெலகித் திரும்புனாரா இல்லையா... 'சதக்'குன்னு கன்னத்துல போட்டுத் தள்ளிருச்சு கத்தி; சல சல சலன்னு ரத்தம் ஒழுகுது.

'யப்பே ரத்தம்!' -முருகாயி கத்துறா.

ரத்தம் ஒழுக முழுசாப் பாக்குறாரு பேயத்தேவரு மொதமொதலா அவள.

"செப்புச் சிலையழகி
செம்மாந்த மாரழகி
உலகத்து அழகையெல்லாம்
ஊறவச்ச பேரழகி"

'யம்மா! முருகாயி! பஞ்சோ துணியோ எடுத்திட்டு வா.'

அவள் எடுத்தோடி வந்த பருத்திப் பஞ்சைப் பச்சென்று அப்பவும் நச்சென்று நின்றது ரத்தம்.

இவரு பாத்தாரு ஒரு பார்வ. அவ இருதயக்கூடு இத்து, கடக்கு மடக்குங்கிற சத்தத்தோட நூறா ஆயிரமா நொறுங்கி விழுகுது.

அவ பாத்தா ஒரு பார்வ.

இவருக்குக் கருங்கல்லு மாதிரி இருந்த மனசு கொழஞ்சு கொழஞ்சு கூழாயிட்டுது.

ஒரு பேச்சும் பேசல. வேல முடிஞ்சு புத்திமாறாட்டமாயிப் போயிட்டாரு.

கொஞ்சநேரம் கிறுக்குப்புடிச்சவ மாதிரி திண்ணையிலேயே உக்காந்திருந்த முருகாயி என்னமோ மயிலிறகைக் கூட்டிப் பெருக்கிறவ மாதிரி மயிரக் கூட்டிப் பெருக்கிட்டு, கீழ குனிஞ்சு உள்ளங்கையில எடுத்து வச்சு உத்து உத்துப் பாத்து வீட்டுக்குள்ள எடுத்துட்டுப் போயி ஒருத்தருக்குந் தெரியாமப் பத்திரப்படுத்தி வச்சுக்கிட்டா- பேயத்தேவர் ரத்தத்தோட வெளிய கிடந்த பருத்திப் பஞ்சை.

ஏலே பேயத்தேவா! ஒனக்குப் புத்திகித்தி கோணிக்கிருச்சா? மூளையில நட்டுகிட்டு கழண்டு போச்சா? கான மிளகாயத் தின்ட காளமாடு மாதிரி தலசுத்தி அலையறவன்! அழகிதான்; அம்சமானவதான். இல்லேங்கல. அதுக்காக... கிளியும் புலியும் ஒண்ணாயிட முடியுமா? அவ யாரு? நீ யாரு? ஏணி வச்சாலும் எட்டுமா? நெனைக்கலாமா அவள? முருகாயி மாதிரி மூக்கு முழியுமா ஒருத்தி இந்த எட்டூர்லயும் இல்ல; வாஸ்தவம்தான். ஆனா அவ நிலைமை என்ன? ஒன் அந்தஸ்து என்ன? நாளப்பின்ன தாய் பிள்ளைக மதிக்குமா? தண்ணிகிண்ணி பொழங்க முடியுமா? அவளுக்கும் ஒனக்குமே ஒண்ணு ஆகிப்போச்சுன்னு வச்சுக்க ஒன்வீட்ல ஒரு நல்லது பொல்லதுக்கு ஆள் வருமா? பொழச்ச தெல்லாம் போச்சப்பா! புழுக்கை விழுந்து போச்சப்பா பெரிய தேவரு வீடுன்னு செல்லம்பட்டி செப்புப்பட்டயத்துல எழுதுவானா இல்லையா? அப்பறம் மழைக்காச்சும் ஒன்வீட்ல மனுசன் ஒதுங்குவானா? மறந்துடுறா அவள! மானங்கெட்ட பயலே!

உள்ள கெடந்து முள்ளாக் குத்துது மனச்சாட்சி. ஆனாலும் கும்மிகொட்டிக் கூத்தடிக்குது மனசு.

"ஒரு நாள் பாத்ததுக்கா இந்த ஒலப்பலாட்டம் பண்ற? மரியாதை கெட்டுப்போகும் சும்மா கெட மனசே"ன்னு சொல்லித்தான் பாக்குறாரு! கிறுத்திரியம் புடிச்ச மனசு கேக்குதா?

குல்லாய எடுத்துத் தலையில வச்சுக்கிட்டுக் கெஞ்சிப் பாத்தாலும் கீழபோடாத குரங்குமாதிரி வெளையாட்டுக் காட்டுது மனசு.

மொத்தக்கூழையும் குடிச்சு முடிச்சு, கடைசி வாய்க் கூழ வழிச்சு உள்ளங்கயையில நக்குறபோதான் உப்பு இல்லேன்னு தெரியுது. அச்சுவெல்லம் கடிச்சா ஒறைக்குது; மொளகா கடிச்சா இனிக்குது.

லேசா முதுகுல ஒரஞ்சினாலே சுர்சுர்ன்னு அரிக்கிற வைக்கப்படப்பு இப்ப உருண்டு பெரண்டாலும் பூவுல படுத்துப்புரள்ல மாதிரி ஒரு புது சொகமாயிருக்கு.

கால்வச்சாப் பொத்துப்போற உச்சிவெயில்ல செவக்காட்டுப் புழுதியில அவ நெனப்பு வந்து நின்னா கொஞ்சங்கூடச் சுடுதில்ல; ஓடத்தண்ணி குறு குறுன்னு உள்ளங்கால்ல ஓடறமாதிரி குளுகுளுன்னு இருக்கு.

காக்கா, குருவி, காடை, கதுவாலி (கௌதாரி) எது கத்துனாலும் இன்பமா இருக்கு.

இப்பல்லாம் வீட்ல படுக்கப் புடிக்க மாட்டேங்குது. தோட்டத்துக்குப் போயி சால்ல தொங்குற தோலக் கழத்தி வாரிக்குழியில விரிச்சுப் படுத்தா வசதியா இருக்கு.

ஊர்ச்சத்தம் ஒலகச்சத்தமெல்லாம் அடங்கி ஒறக்கம் வராமப் பொரண்டு பொரண்டு கடைசியில கவுந்தடிச்சுப் படுத்தா மூணே சத்தந்தான் ஒண்ணுமாத்தி ஒண்ணு சுத்திச்சுத்தி வருது.

"ஜல்ஜல்", கொலுசுச் சத்தம்...

"க்ளிங் க்ளிங்", வளவிச் சத்தம்...

"சரக் சரக்", பாவாடைச் சத்தம்...

கண்ண மூடுனா மூஞ்சியில வந்து முட்டிடுட்டு முட்டிட்டுப் போகுது லச்சகெட்ட பச்சத்தாவணி!

இந்த ஆளு பாடுதான் இப்படீன்னா அவ பாடு இன்னும் மோசம்.

"ஏண்டி முருகாயி! துப்புக்கெட்டவளே! இதுக்கு முன்னால ஆம்பளைகளையே பாக்காதவ மாதிரியில்ல கெறங்கிக் கிறுகிறுத்து நிக்கிறவ! குதிகால் இல்லாதவ கொலுசுக்கு ஏன் ஆசப்படுற? இந்த ஊர் ஒலகத்தப் பத்தித் தெரியாதா ஒனக்கு? கூனு குருடுன்னாலும் சொந்தக்காரியக் கல்யாணம் பண்ணுவாகளே தவிர-அந்தஸ்தில கொறஞ்சவுகள தொடுவாகளா? இது ஒனக்கே நல்லாருக்கா? அடிச்சட்டியில சோறு புடிச்ச மாதிரியில்ல அந்தாளு மூஞ்சிய அப்பிவச்சிருக்க மனசில? ஒங்கப்பன் தகரப்பொட்டிக்குள்ள தங்கக்கத்தி சேராதுடியம்மா! புத்திய மாத்திக்கிட்டுப் பொத் திக்கிட்டுக் கெட."

அடிச்சடிச்சுக் சொல்லிப் பாத்தாலும் அடங்கலயே மனசு; சிலுத்துக்கிட்டுல்ல நிக்குது! மனசக் கொரங்குன்னு சொன்னவுக ஒண்ண மறந்துட்டாக. மனசு கொரங்குதான். வால்மட்டும் நாய் வாலு. மூங்கில் பட்டைய வச்சு முக்கிமுக்கிக் கட்டிப்பாத்தாலும் நிமிரவா போகுது நாய்வாலு?


முருகாயி அவளாப் பேசி அவளாச் சிரிக்க ஆரம்பிச்சா. அக்கம்பக்கம் பாத்து யாரும் இல்லேன்னா, மீச ஒதுக்க வந்தப்ப பேயத்தேவர் ஒக்காந்த பலகையில ஒக்காந்து ஒக்காந்து எந்திரிச்சா. வீட்டு வாசல்ல எந்தச் சத்தம் கேட்டாலும் கூட்டுக்கு வெளிய தல நீட்டுற குருவிக் குஞ்சு மாதிரி பொசுக்குன்னு தலயக்காட்டி உள்ள ஓடிப்போனா. ஆத்தா ஒண்ணு கேட்டா அவ ஒண்ணு சொன்னா. காப்படி அரிசி போட்டுக் கஞ்சி காச்சுடின்னு சொன்னா. சோத்த நாய்க்குப் போட்டுட்டு வடிச்ச கஞ்சிய வட்டியில வச்சிருந்தா. ஏண்டி முருகாயி ஒனக்கு முனி கினி புடிச்சிருச்சான்னு கேட்டா, ஒரு பதிலும் பேசாம "முனி புடிக்கல பேயத்தேவங்கிற பேய்தான் புடிச்சிருச்சு"ன்னு மனசுக்குள்ளயே சொல்லிக்கிட்டுச் சிரிச்சுக் சிரிச்சே வார்த்தையைத் தேச்சுப்புட்டா.

பேயத்தேவர் மாடுகன்டு ஓட்டித் தெக்குக் காட்டுக்குப் போறதுக்கு ஒரு நேர் பதை இருக்கு. ஆனா இப்பவெல்லாம் அவரு நேர் பாதையில போறதில்லையே! ஊர்க்கோடி சுத்தி சன்னாசியப்பன் கோயிலத் தாண்டித்தான் நேர் பாதை வந்து சேர்றாரு. ஏன்னா ஊர்க்கோடியிலதான் முருகாயி வீடு இருக்கு.

இந்தா வந்திரமாட்டாளா அந்தா வந்திர மாட்டாளான்னு கண்ணும் மனசும் கதிகலங்கித் துடிக்குது. ஆனாலும் சிக்க மாட்டேங்கிறா சிறுக்கி.

(வளரும்)





யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி ம.ஜீவந்தி பாடசாலை கொடியேற்றுவதையும் விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் இசையும் அசைவும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## கலந்துரையாடல்

(பூநகரி)

பூநகரி பிரதேசத்திலுள்ள உணவகங்கள், வெதுப்பகங்கள் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகங்களின் உரிமையாளர்களுக்கு சுகாதாரப் பிரிவினால் நடாத்தப்படும் அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பூநகரி பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பல முக்கியமான விடயங்கள் பற்றி ஆராயப்படுவதால் பூநகரி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட சகல தரப்பினரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பூநகரி பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஸ்ரீ-9-84)

# நாடளாவிய ரீதியில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்பு

## கபே அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அடிப்படைச் சட்டங்கள் மற்றும் தேர்தல் சட்டங்கள் அப்பட்டமாக மீறப்பட்டு வருகின்றன.

வடக்கில் அச்சம் சூழ்ந்து கொண்டுள்ள நிலையில் பக்கச் சார்பான நடவடிக்கைகள் மேலோங்கிக் காணப்படுகின்றன. இது வரையில் 92 தேர்தல் முறைகேடுகள் பதிவாகியுள்ளன.

இவையனைத்தும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கு பாரிய நெருக்கடியையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளதாக கபே அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

வாக்காளர்கள் சுதந்திரமாக செயற்பட்டு தமது வாக்கினை அளிப்பதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் தேர்தல்கள் ஆணை யாளருக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கு ம இருக்கின்றது என்றும் அவ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவ்வமைப்பின் பேச்சாளர் கீர்த்தி தென்னக்கோன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், தேர்தல் பிரசாரப் பணிகள் தீவிரமடைந்துள்ள நிலையில் தேர்தல் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன. நேற்று முன்தினம் நண்பகல் வரையில் நாடளாவிய ரீதியில் 92 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், அச்சுறுத்தல் மற்றும் தேர்தல் காரியாலயங்கள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. அரசியல் கட்சிகள் வேட்பாளர்கள் சுதந்திரமாக பிரசாரங்களை மேற்கொள்ள முடியாதிருக்கின்றது.

வடக்கில் எதிர்த் தரப்பினருக்கான சுதந்திரம் முடக்கப்பட்டுள்ளது. அங்கு போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மக்களிடத்தில் செல்ல முடியாதுள்ளது. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். அங்குள்ள மக்கள் தேர்தல் தொடர்பில் பெரிதாக ஆர்வம் காட்டுவதாகவும் தெரியவில்லை. இதற்குக் காரணம் அங்கு இடம்பெறுகின்ற தேர்தல் முறைகேடுகளேயாகும்.

குறிப்பிட்ட ஒருசாராருக்கு மாத்திரமே வடக்கின் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் சில முக்கிய பிரதேசங்களுக்கு செல்வதற்கு அனுமதியளிக்கப்படுகின்றது. மாற்றுத் தரப்பினருக்கு இந்த அனுமதி மறுக்கப்படுகின்றது. இது அடிப்படை மற்றும் தேர்தல் சட்டம் ஆகியவற்றினை அப்பட்டமாக மீறுகின்ற செயலாகும். தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பொலிஸார் இவ்விடயத்தில் தமது பொறுப்பினை தவறவிட்டுள்ளனர். பாதுகாப்புத் தேவைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் தமது கடமையைச் சரிவரச் செய்வார்களேயானால் வன்முறைகள் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்க முடியாது.

இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இல்லாதுவிட்டால் வடக்கு -கிழக்கு மட்டுமல்ல நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் நீதியான, சுதந்திரமான தேர்தல் நடைபெறாது என்றார். (ஸ்ரீ-2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு 50 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு வழங்க வேண்டும்

வெள்ளத்தாலும் மண்சரிவினாலும் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டுமென சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நேற்று வலியுறுத்தியுள்ளது.

18 மாவட்டங்களில் 26ஆயிரம் வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாகவும் அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படுவது அவசியம் எனவும் மேற்படி கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்களுக்கு 50 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடுவழங்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் அரசாங்க ஊழியர்களுக்கு அடிப்படை சம்பளத்தில் 3 மடங்கு மாத்திரம் கடனாக வழங் கப்பட்டுள்ளதாகவும் மேற்படி கூட்டமைப்பு மேலும் கூறியுள்ளது. எனினும் 3 மாத அடிப்படை சம்பளத் தொகையை கடனாக வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என அக்கூட்டமைப்பின் தலைவர் சமன் ரட்னபிரிய தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# ஊழல் இல்லாத தலைமைத்துவம் மூலமே நாட்டினை அபிவிருத்தி செய்ய முடியும்

## கலாநிதி சந்திரசேகரம் தெரிவிப்பு

ஊழல் இல்லாத தலைமைத்துவம் மூலமே நாட்டினை அபிவிருத்தி செய்ய முடி யும் என யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ். சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் 'ஆசியாவில் இலங்கைப் பொருளாதாரத்தில் பலமும் பல வீனமும்' என்ற தலைப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டினை அபிவிருத்தி செய்வதற்கு சிறந்ததொரு தலைமைத்துவம் வேண்டும். அத் தலைமைத்துவமானது நாட்டினை குறைந்தது 25 வருடங்கள் தொடர்ச்சியாக ஆட்சி செய்ய வேண்டும்.

மேலும் அனைத்து சமூக நலச் சேவைகளையும் நிறுத்தி அவற்றுக்கு செலவு செய்யத நிதியினை பொருளாதார உட்கட்டுமானங்களுக்கு செலவு செய்ய முன்வர வேண்டும். அத்தோடு தனது பதவிக்காலம் முடிந்து அல்லது பதவியை விட்டு வெளியேறும் போது தலைவரும் அவரது குடும்பத்தினரும் அரசியலுக்கு வருவதற்கு முன்பு இருந்த சொத்தை தவிர வேறு எதனையும் தமது உடை மையாக்கிக் கொள்ளக் கூடாது.

இவ்வாறே தனது இனம்,மதம், மொழி, பிரதேசம்,சொந்தம்,நண்பர்கள் என பாகுபாடு இன்றி நாட்டின் தேச ஒற்றுமைக்காக சேவையாற்ற வேண்டும்.

இதேவேளை இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஏறத்தாழ இரண்டு வருடங்கள் முடிவடைந்த நிலையில்,யுத்தம் ஏற்படக் காரணமாக இருந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இன்னும் எட்டப்படவில்லை என்றே கூற முடியும்.

அதுமட்டுமன்றி பிரச்சினைக்கான தீர்வு வழிமுறையாக சர்வகட்சி மாநாடுகள் கடந்த 1969ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வந்துள்ளன.

மேலும் எல்லோருடைய கருத்துக்களையும் கேட்டு பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது . இவை தவிர இலங்கைக்கு கிடைத்த சுதந் திரமானது எல்லாமக்களையும் ஒன்றிணைக் கக்கூடியதும் நாட்டின் நீண்ட கால அபிவிருத்தியை இலக்காகக் கொண்டதுமான, தூரநோக்குள்ள அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்குவதில் தோல்வியடையவே செய்துள்ளது. ஏனென்றால் இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் விலைகொடுத்துப் பெறப்பட்ட சுதந் திரம் அல்ல; அதாவது சார்பு நிலை சுதந்திரம் அல்ல.

குறிப்பிட்டுக்கூறுவதாயின், குடியேற்ற நாட்டுவாதம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டமையால் இலங்கையில் ஏற்பட்ட ஒரே ஒரு விளைவு யாதெனில் முன்பு பிரித்தானியர்களின் கைகளில் இருந்த ஆட்சிப்பொறுப்பு இப்போது எந்த வகையிலும் பக்குவப்படாத இலங்கை உயர் வர்க்கத்தினரை அடைந்திருந்தமையேயாகும்.

அது மட்டுமன்றி,வர்க்க ரீதியான எதுவித திருப்பத்தினையும் குறிப்பாக பொருளாதார முகாமைத்துவத்தை பொறுத்தவரை குறித்து நிற்கவில்லை.

அதாவது பொருளாதாரமானது பழைய ஒழுங்கு முறையிலேயே தொடர்ந்து இருக்க தலைப்பட்டதே தவிர அடிப்படை நிலையில் மாறுபாடுகள் எதுவும் நிகழவில்லை.





மேலும் இலங்கையானது ஆசியாவில் பொருளாதாரத்தில் பலவீனமடைய சுதந்திரத்திற்காக விலை கொடுக்காமையும் இலங்கையின் நலச் செலவீடுகள் அதிகரித்தமையும், தாராள ஜனநாயகம் போன்ற பண்புகளும் தான் காரணம். இவ்வாறு இலங்கையின் பலவீனமும் பலமும் அமைவு பெறுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

## மெய்வல்லுநர்போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் உதைப்பந்தாட்ட வீரரும் பழைய மாணவர் சங்கச் செயலாளருமான வி.சோமநாதனும் அவரது பாரியாரும் மற்றும் ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி யும் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான சி.இராசநாயகமும் அவரது பாரியரும், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தினால் " இலங்கை பொருளாதாரத்தின் பலமும் பலவீனமும்" எனும் தலைப்பிலான கருத்தரங்கு நேற்று முன்தினம் ஆரியகுளத்தடியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். சந்திரசேகரம், சமூக விஞ்ஞான படிப்பு வட்டச் செயலாளர் என். வேல்தஞ்சன், பொருளியல்துறை விரிவுரையாளர் எஸ். உதயகுமார் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் எஸ்.கரன்)

# காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் தொடர்பான மனு கிடைத்தது

## ஐ.நா. பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட தொடர்பில் அவரது மனைவி சமர்ப் பித்த கடிதம் கிடைத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சபையின் பேச்சாளர் மார்ட்டீன் நெசர்ஸ்கீ இதனை தெரிவித்துள்ளார்.

இந்த கடிதத்தின் பிரதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் கடிதம் தொடர்பில் மேலதிக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் எந்த பகுதியில் ஒரு ஊடகவியலாளர் காணாமல் போனாலும் அது கண்டனத்துக்கு உரிய செயலே என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பிரித்தானிய தொழில் விசா வழங்கும் நடைமுறையில் மாற்றங்கள்

## ஏப்ரல் முதல் அமுல்

(கொழும்பு)

பிரித்தானிய அரசு தொழில் விசாக்களை வழங்கும் நடைமுறையில் சில மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைத் தவிர்ந்த ஏனைய நாடுகளில் இருந்து உழைக்க வருவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் இம்மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இம்மாற்றங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படவுள்ளன.

இம்மாற்றங்களுள் முக்கியமான சில வருமாறு,

தொழில் வழங்குநர் Sponsorship சான்றிதழை பிரித்தானிய எல்லைக் காப்புப் படையினரிடம் இருந்து பெற்றுக் கொண்ட பின்பு தான் வெளிநாடுகளில் இருந்து வேலைக்கு ஆட்களை இனி மேல் அழைக்க முடியும்.

எந்த வேலைக்கு ஆட்களை கூப்பிடுகின்றார் என்பது குறிப்பாக எல்லைக் காப்புப் படையினருக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், ஒரு வேலைக்கு தலா ஒரு இலட்சத்து 50ஆயிரம் பவுன்ஸ் அல்லது அதற்கு அதிகமான சம்பளம் கொடுக்க தயாராக உள்ள தொழில் வழங்குநருக்கு எல்லைக் காப்புப் படையினரால் Sponsorship சான்றிதழ் வழங்கப்படுகின்றமையில் மட்டுப்பாடுகள் இராது. (ஸ்ரீ)

# வேடம்புனைதல் நிகழ்வு


பூநகரி கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு சகல பாடசாலைகளிலும் ஆரம்பப்பிரிவு வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப் பட்ட வேடம் புனைதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு. தருமரட்ணம், சிறப்பு விருந்தினராக பூநகரி கோட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோகசகர் பா. சிறில்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் நிகழ்வில் 150 இற்கும் மேற்பட்ட சிறார்கள் பல்வேறு வேடங்களை புனைந்து வருவார்கள். மாவட்டத்தில் முதல் நிகழ்வாக இப்பாடசாலையில் இந்நிகழ்வு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-9-84)

# மடு, மன்னாருக்கான புகையிரத பாதையும் நவீனமயப்படுத்தப்படும்

## இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



(கொழும்பு)

காலி – மாத்தறை அதிவேக ரயில் பாதையைப் போன்று மடு, மன்னாருக்கான ரயில் பாதையும் நவீனமயப்படுத்தப்படும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக்கே காந்தா தெரிவித்துள்ளார்.

காலி– மாத்தறைக்கு இடையில் அதிவேக ரயில் பாதையை நேற்று முன்தினம் திறந்து வைத்து பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இத்தகைய அதிவேக ரயில் பாதை கொழும்புவரை நீடிக்கப்படும். பின்னர் அது மடு, மன்னாருக்கும் நீடிக்கப்படும் என அவர் கூறினார்.

மணித்தியாலயத்திற்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்யக் கூடிய காலி ரயில் நிலையத்திலிருந்து மாத்தறை நோக்கி நேற்று பிற்பகல் 12.30 மணிக்கு புறப்பட்டது.

இந்நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, போக்குவரத்துப் பிரதியமைச்சர் ரோஹன திசாநாயக்க, இந்திய நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மோஹன் திவாரி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ)




★1229 - புனித ரோம் பேரரசின் மன்னன் இரண்டாம் பிரெட்ரிக் எகிப்திய மன்னன் அல்-கமீல் உடன் 10 ஆண்டுகள் போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டான்.

★1478 - இங்கிலாந்தின் நான்காம் எட்வேர்ட்டிற்கு எதிராகச் சதி முயற்சியில் இறங்கியதற்காக அவனது சகோதரன் ஜோர்ஜ் (கிளாரன்ஸ் இளவரசன்) தூக்கிலிடப்பட்டான்.

★1797 - ட்ரினாட் பிரித்தானியர்களிடம் வீழ்ந்தது.

★1832 - இலங்கையின் பல இடங்களில் ஓர் அசாதாரண எரிமீன் (Meteor) தோன்றியது.

★1861 - அலபாமாவில் ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புக்குத் தலைவரானார்.

★1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வில்லியம் ஷேர்மன் தலைமையிலான கூட்டுப்படைகள் தென் கரோலினாவின் மாநில அவையைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

★1911 - முதலாவது அதிகாரபூர்வமான விமான அஞ்சல் சேவை இந்தியாவில் அலகாபாத்தில் ஆரம்பமானது.

★1929 - முதற்தடவையாக ஒஸ்கார் விருது அறிவிக்கப்பட்டது.

★1930 - கிளைட் டொம்பா ஜனவரியில் எடுத்த புகைப்படங்களை ஆராய்கையில் புளுட்டோவைக் கண்டுபிடித்தார்.

★1932 - சீனக் குடியரசிடம் இருந்து மன்சூகுவோவின் விடுதலையை ஜப்பான் மன்னர் அறிவித்தார்.

★1957 - கென்யாவின் போராளித் தலைவர் டெடான் கிமாத்தி பிரித்தானியக் குடியேற்ற அரசினால் தூக்கிலிடப்பட்டார்.

★1959 - நேபாளத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

★1965 - காம்பியா, ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையடைந்தது.

★1979 - தெற்கு அல்ஜீரியாவில் சகாரா பாலைவனத்தில் முதற்தடவையாக பனி மழை பெய்தது.

★1991 - லண்டனில் தொடரூந்து நிலையங்களில் இரண்டு குண்டுகள் வெடித்தன.

★2003 - தென்கொரியாவில் சுரங்கப் பாதை ஒன்றில் ஏற்பட்ட தீயில் சிக்கி 200 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★2004 - ஈரானில் இரசாயனப் பொருட்களை ஏற்றிச் சென்ற தொடரூந்து ஒன்று தீப்பற்றியதில் 295 பேர் கொல்லப்பட்டனர்.

★2007 - டில்லியிலிருந்து பாகிஸ்தான் சென்று கொண்டிருந்த 'சம்ஜவுதா' விரைவு தொடரூந்தில் குண்டுகள் வெடித்துத் தீப்பிடித்ததில் 68 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★1745 - வோல்ட்டா, இத்தாலிய இயற்பியலாளர் (இ. 1827)

★1836 - ஸ்ரீ இராமகிருஷ்ணர், இந்தியாவின் ஆன்மீகவாதி (இ. 1886)

★1860 - மா.சிங்காரவேலர், இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தை (இ. 1946)

★1926 - வ.ஐ.சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர் (இ. 2009)

★1931 - டொனி மொறிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர்.

### இறப்புகள்

★1564 - மைக்கல் ஆஞ்சலோ புவோனரோட்டி, இத்தாலிய ஓவியர் (பி. 1475)

★1967 - றொபேட் ஒப்பன்ஹெய்மர், அணு குண்டைக் கண்டுபிடித்தவர் (பி. 1904)



1546 - மாட்டின் லூதர், ஜேர்மனிய சமய சீர்திருத்தவாதி (பி. 1483)

# காதல் என்பது மாயையா?



ஆன்மீகம் 20

இளமைக் காலத்தில் உங்கள் ஆசைகளில் முக்கியமான இடத்தைப் பிடித்திருப்பது எது?

காதல். கல்லூரிகளில் காதலர்களைப் பார்த்திருக்கிறேன். ஒருவருக்காகவே அடுத்தவர் பிறந்து வளர்ந்தது போல் தெரிவார்கள். கண்ணிலும் முகத்திலும் சந்தோஷம் கொப்பளிக்கும். காதலின் அதிர்வுகள் அவர்கள் இருக்கும் சூழ்நிலையையே சந்தோஷமாக்கும்.



துடிப்பும் துள்ளலுமாக அவர்கள் திரிவதைப் பார்த்தால்,மரணம் வரை இது தொடரும் என்று தான் தோன்றும். பெற்றோர்,சமூகம்,கலாசாரம் எல்லாவற்றையும் எதிர்த்துக் கொண்டு அவர்கள் திருமணம் செய்து கொள்வார்கள்.

ஐந்து அல்லது ஆறு வருடங்கள் கழித்து அவர்களைப் பார்த்தால், பகீரென்றிருக்கும். துடிப்பும் உயிரோட்டமுமாக இருந்தவர்கள், உலகத்தையே தொலைத்து விட்டவர்கள் போல் உலர்ந்திருப்பார்கள்.

யாரைப் பற்றி நினைத்தாலேயே முகத்தில் ஆனந்தம் வந்ததோ, அவர்களின் அருகாமையே இப்போது வேதனையாக மாறி விட்டிருக்கும்.

ஏன் இப்படி? மிக ஆழமாகக் காதல் வயப்கட்டிருந்தபோது,பலமணி நேரம் முணுமுணுப்பின்றிக் காத்திருந்தார்கள். பசி,வெயில்,மழை எதுவும் தெரியவில்லை. காலம் தெரியவில்லை. கனவுகள் நிறைவேறிய பின், அங்கே வியாபாரம் நுழைந்து விட்டது.

காதலை ஒரு முதலீடாக நினைத்து வாழ்க்கையைத் தொடங்கினால், சீக்கிரமே சலிப்பும் வலியும் வேதனையும் வருவதைத் தவிர்க்கமுடியாது.

சங்கரன்பிள்ளை,பூங்காவில் ஓர் அழகான பெண்ணைப் பார்த்தார். அவள் அருகில் போய் அமர்தார். அவள் நகர்ந்து விலகப் பார்த்ததும் அவள் முன் மண்டியிட்டார்.

'உன்னை என் உயிருக்கும் மேலாகக் காதலிக்கிறேன்.நீ இல்லையென்றால், இப்பெழுதே செத்துவிடுவேன்' என்று உருக்கமாகச் சொன்னார். அந்தப் பெண் அவருடைய காதல் வசனங்களில் மயங்கினாள். அவர் மடியில் படுத்துக் கொண்டாள்.

அப்புறம் என்ன? சங்கரன்பிள்ளை அவளிடம் விருப்பப்படியெல்லாம் நடந்து கொண்டார் மணி ஏழரை ஆனது. சங்கரன்பிள்ளை தன் கடிகாரத்தைப் பார்த்து விட்டு பதறி எழுந்தார். 'என்னை விட்டுப் போகாதீர்கள்' என்றாள் அந்தப் பெண், மயக்கம் விலகாமல்.

'ஐயோ, இன்றைக்கு நேரத்தோடு வருவதாக என் மனைவியிடம் சொல்லியிருக்கிறேனே!' என்றார் சங்கரன் பிள்ளை.

'மனைவியா? யுகம் யுகமாகக் காதலிப்பதாகச் சொன்னீர்களே?அதை சத்தியமென்று நம்பினேனே?' என்று அந்தப் பெண் அழ ஆரம்பித்தாள்.

'அட முட்டாளே! காதல் என்பது, 'திறந்திடுசீஸேம்' என்று அலி பாபா சொன்ன சொற்களைப்போல் காரியத்தை சாதித்துக் கொள்ளப் பயன்படும் ஒருமந்திரச் சொல் அவ்வளவு தான்!' என்று சங்கரன்பிள்ளை அவளை உதறினார். சங்கரன்பிள்ளையைப் போல் நடந்துகொள்வதையெல்லாம் காதல் என்று முத்திரை குத்தலாமா?

ஓர் ஆணும் பெண்ணும் 'நான் இதைத் தருகிறேன், நீ அதைத் தருவாயா?' என்று எழுதாமல் போட்டுக் கொள்ளும் ஒப்பந்தமா காதல்? உங்களுக்குச் சமூரீதியாக ஒரு துணை தேவைப்படுகிறது. அது உடலிச்சையினால் இருக்கலாம். மனத் திருப்திக்காக இருக்கலாம்.பொருளாதார வசதிக்காக இருக்கலாம். ஆனால், இப்படி ஒரு தேவையினால் பிறப்பது உண்மையான காதல் ஆகாது.

திருமணத்தை, சமூகப் பாதுகாப்பாக மட்டுமே நினைத்து, காதலின் அடிப்படையை உணராதவர்களால் அதைப்படுகொலை செய்யத்தான் முடியும். இந்த ஏற்பாட்டில் வேறு என்னென்னவோ வசதிகள் கிடைத்திருக்கலாம். ஆனந்தம் மட்டும் கிடைக்கவே கிடைக்காது. தலைமுறை தலைமுறையாக இந்தத்துயரம் நடந்து கொண்டிருக்கிறது.

பர்மாவைச் சேர்ந்த ஒரு சிப்பாய், இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் ராணுவத்தை விட்டு விலகி,வேறு வேலைக்குப் போய்விட்டார். உண்மையில், அவர் போர்க்களத்தில் ஆக்ரோசமான தாக்குதல்களுக்கு நடுவில் இருந்தது, பத்துப் பதினைந்து நிமிடங்கள்தான்.

'ஒரு பக்கம் அமெரிக்கா குண்டு வீசுகிறது. இன்னொரு பக்கம் ஜப்பான் குண்டு எறிகிறது. எங்கு திரும்பினாலும் துப்பாக்கிச்சத்தம். பீரங்களின் முழக்கம். வானத்தில் தீப்பொறிகள். கரும்புகை' என்று புதிதாகச் சந்திக்கும் நபர்களிடம் அவர் தவறாமல் அந்தப் பதினைந்து நிமிடங்களை மணிக் கணக்கில் விபரித்துக் கொண்டோ இருப்பார்.

'போருக்கு அப்புறம் என்ன செய்தீர்கள்?' என்று கேட்டால், 'விற்பனைப் பிரதிநிதியாக இருக்கிறேன்.' என்று அடுத்த இருபத்தைந்து வருடங்களைப் பற்றி, ஒற்றை வாக்கியத்தில் பதில் சொல்வார். வாழ்க்கையைத் தீவிரதாக அவர் வாழ்ந்தது அந்தப் பதினைந்து நிமிடங்கள்தாம்.


அது போன்ற தீவிரத்தோடுதான் காதல் வயப்பட்டிருக்கும் காலங்களும் வாழப்படுகின்றன. அதனால் தான் காதலித்த தினங்களைப் பற்றிப் பேசும் போது, கிழவர்கள் முகத்தில் கூட ஒரு பிரகாசத்தை நீங்கள் கவனிக்கலாம். அப்பேர்ப்பட்ட காதலை ஒரு பரஸ்பர உதவித்திட்டமாக, அதாவது மியூச்சுவல் பெனிஃபிட் ஸ்கீமாக நினைக்காதீர்கள்.

காதல் வியாபாரம் அல்ல. மாயையும் அல்ல. அது உண்மையில் உன்னதமானதொரு உணர்வு!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# மின்பொறி ஊடகங்களில் செய்திச் செம்மையாக்கம்

03



வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளிலும் இரண்டு முக்கிய அம்சங்கள் உண்டு. ஒன்று தலைப்பு, மற்றையது அதன் கீழே அதன் விரிவாக்கம், தலைப்பு குறுகிய முறையிலேயே அமைந்திருக்கும்

உதாரணம்: நாளை விடுமுறைதினம் என அறிவிக்கபட்டுள்ளது. அதன் விரிவாக்கத்தின்போதுதான் நாளை செவ்வாய்கிழமை அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் வங்கிகள் ஆகியன மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்று சொல்வார்கள்.

இப்பொழுது நாம் தந்திகள் அடிப்பதில்லையெனினும், நம்மிடையே Cell-Phone செல்லிட தொலைபேசிகளில் வாக்கியங்கள் குறுவடிவினவையாகவே அமையும். இதனை ஆங்கிலத்தில் **SMS** என்பர்.

வானொலி/ தொலைக்காட்சி செய்திகளை ஒலி/ஒளிபரப்பும் பொழுது

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில், சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

பெரும்பாலும் அந்த ஒலி/ஒளிபரப்பினை தீர்மானிக்கும் சக்தி அல்லது சாதனம் பற்றி தெளிவாக மனதிற்கொள்ள வேண்டும். அதனாலேயே சில தனியார் வானொலிகள் தங்கள் செய்திகளை அறிவிக்கும்பொழுது உண்மை, நேர்மை, விரைவு என்றெல்லாம் கூறிக்கொள்வார். இதனால் அரசாங்க ஊடகங்கள் எவ்வாறு கூறுகின்றன என்பதையும் கேட்பது வழக்கமாகிவிட்டது.

வானொலி/தொலைக்காட்சி ஊடகங்கள் வெகுஜன ஊடகங்களாக இருப்பதால், அவற்றின் ஊடாக ஒலி/ஒளிபரப்பப்படும் செய்திகள் மக்கள் மத்தியில் விளைவிக்கக்கூடிய தாக்கங்கள் பற்றியும் ஊடகவியலாளர்கள் கரிசனை காட்டுவது அவசியம்.

இந்த ஊடகங்கள் உடனடித்தன்மை (Spontaneous/Current) வாய்ந்தவை. ஒரு சம்பவம் நிகழ்ந்து சில நிமிடங்களுக்குள் நேயர்களுக்கு அது பற்றி அறிவிக்கக்கூடிய ஆற்றலை தம்மகத்தே கொண்டவை. அறிவிக்கப்படும் சம்பவம் நேயர்கள் மத்தியில் எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதாக அமையும் பட்சத்தில் (இயற்கை அனர்த்தங்கள் பற்றி முன்னெச்சரிக்கை, நெருக் கடிகளை அறிக்கையிடுதல் போன்ற உதராணங்கள்), அதனை விரைவாக அறிவிக்க வேண்டும் என்பதை விடவும் பொறுப்பான முறையில் அறிவிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

இலங்கையில் அச்சு ஊடகங்களின் வரலாறு 100 ஆண்டுகளைக் கடந்ததாகக் காணப்படுகிறது. அந்த நெடிய காலப்பகுதியின் வளர்ச்சிகளை அச்சு ஊடகத்துறை உள்வாங்கிக் கொண்டிருப்பதை சமகால பத்திரிகைகளில் செய்தி அறிவிக்கப்படும் விதத்தில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

வானொலி ஊடகத்தின் வயது 85 ஆண்டை எட்டியபோதிலும், அதன் செய்தி அறிக்கையிடல் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள வளர்ச்சி குறித்து திருப்தி கொள்ள முடியும் என்று தோன்றவில்லை.

வானொலி ஊடகத்தின் சிறப்பியல்களும், பண்புகளும் சரியாக புரிந்து கொள்ளப்படாமல் வாக்கியத்தை நிரற்படுத்துவதுவே செய்தி செவ்வையாக்கம் என்ற கருத்து அங்கு வேரூன்றியிருக்கிறது. ஒரு சம்பவம் நிகழ்ந்த இடத்தின் சூழ்நிலையை நேயரின் மனக்கண் முன் கொண்டு வரக்கூடிய ஒலிகளைப் பயன்படுத்தி பின்புலத்தை விளங்க வைத்தல் (Reporting With actualities) போன்ற நுட்பங்கள் மிகவும் அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன.

வீ.ஏ.திருஞானசுந்தரம்,
முன்னாள் பிரதிப்பணிப்பாளர்நாயகம்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

(தொடரும்)

# எகிப்து எழுச்சியை தொடர்ந்து ஈரான் மற்றும் அரபு நாடுகளிலும் கிளர்ந்தெழுந்தனர் மக்கள்


(டெஹ்ரான்)

எகிப்து எழுச்சியைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடான ஈரான், வட ஆபிரிக்க நாடான லிபியா, அரபு தீபகற்ப நாடான ஏமன், வளைகுடா நாடான பக்ரைன் ஆகியவற்றில் அரபுகளுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி தீவிரம் அடைந்துள்ளது.

இந்நிலையில் ஈரானின் அரசுக்கெதிரான போராட்டத்தை அமெரிக்கா பாராட்டியுள்ளது. எகிப்தில் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் 30 ஆண்டுகால ஆட்சியை அந்நாட்டு மக்கள் 18 நாட்களாகப் போராடி வீழ்த்தினர். இந்த வெற்றி மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா, அரபு தீபகற்பம் மற்றும் வளைகுடாப் பகுதிகளில் உள்ள மக்களிடம் பெருத்த அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி ஈரானில் எகிப்தின் வெற்றியைக் கொண்டாடும் விதமாகவும் ஜனாதிபதி அகமதி நிஜாதி பதவிவிலகக் கோரியும் எதிர்க்கட்சித் தலைவர்களான மிர் உசேன் மவுசாவி மற்றும் மெஹ்தி கரோபி இருவரும் பேரணிக்கு அழைப்பு விடுத்திருந்தனர். இந்தப் பேரணியின் மீது ஈரான் பொலிஸார் மற்றும் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலில் இருவர் பலியாகினர். ஆளும் கட்சி எம்.பி.க்கள் நாட்டின் அமைதியை சீர்குலைத்ததற்காக மவுசாவி மற்றும் கரோபிக்கு மரண தண்டனை அளிக்க வேண்டும் என்று கொந்தளித்தனர்.

பலியானவர்களில் ஒருவரான டெஹ்ரான் நுண்கலைக்கல்லூரி மாணவரான சனா இஷலே என்பவரை இரு தரப்பும் தங்கள் ஆதரவாளர் என்று கோரியதால் அவரின் இறுதிச் சடங்கில் நேற்று முன்தினம் மோதல் மூண்டது. அவரது இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் தலைநகர் டெஹ்ரானில் உள்ள பல்கலை வளாகத்தில் நடந்தபோது ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் திடீரென அங்கு வந்து தாக்குதல் நடத்தினர். இதில் பலர் படுகாயம் அடைந்தனர். இதற்கிடையில் எதிர்க்கட்சித்தலைவர் கரோபி தனது இணையத் தளத்தில் எம்.பி.க்களின் மிரட்டலுக்கு நான் அஞ்சமாட்டேன் என்று தெரிவித்துள்ளார்.



இந்நிலையில் நேற்று முன்தினம் ஈரான் போராட்டம் குறித்துப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா,

மக்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்கு உரிமையுடையவர்கள். எகிப்தில் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய போது அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை. ஆனால் ஈரானில் மக்கள் தங்கள் குறைகளைச் சொன்னால் அரசு அவர்களை சுடுகிறது. எகிப்து மற்றும் ஈரானைப் பாருங்கள் என்பதுதான் மத்தியகிழக்கில் உள்ள எங்கள் நட்பு நாடுகளுக்கு நாங்கள் தரும் செய்தி. ஈரான் மக்கள் தங்கள் விடுதலைக்காகத் தொடர்ந்து துணிவுடன் போராடுவர் என நான் நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

**ஏமனில் 6 ஆவது நாள் போராட்டம்**

அரபு தீபகற்ப நாடான ஏமனில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலகக் கோரி நேற்று முன்தினம் 6 ஆவது நாளாக மக்கள் போராட்டம் நடத்தினர். சனா பல்கலையில் இருந்து அல் சபின் சதுக்கத்திற்கு எதிர்பாளர்கள் புறப்பட்ட போது அவர்கள் மீது ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் கடும் தாக்குதல் நடத்தினர். இதில் நான்கு பேர் காயம் அடைந்தனர். இருதரப்பு மோதலையும் நிறுத்த முடியாமல் பொலிஸார் திணறினர்.

**லிபியாவில் கொந்தளிப்பு**

லிபியாவில் 41 ஆண்டுகளாக முவாம்மர் கடாபி ஆட்சி செய்து வருகிறார். 1996 இல் தலைநகர் டிரிபோலியில் உள்ள அபு சலிம் சிறையில் ஆயிரத்து 200 கைதிகள் கொல்லப்பட்டு அதற்குள்ளேயே புதைக்கப்பட்டனர்.

இதையடுத்து சமீபத்தில் அவர்களின் உறவினர்கள் இவ்வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பொது மக்கள், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

கடந்த 14 ஆம் திகதி கடாபி பதவி விலககோரி பிங்காசி நகரில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். நேற்று முன்தினம் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள் மீது கடாபி ஆதரவாளர்கள் மற்றும் பொலி ஸார் நடத்திய தாக்குதலில் 14 பேர் காயம் அடைந்தனர்.

**பக்ரைனில் 3 ஆவது நாளாக போராட்டம்**

வளைகுடா நாடான பக்ரைனில் மன்னர் ஆட்சி நடந்து வருகிறது. அந்நாட்டில் பெரும்பான்மை மக்கள் ஷியா பிரிவினர். மன்னர் சன்னி பிரிவைச் சோந்தவர். கடந்த 14 ஆம் திகதி ஷியா பிரிவினர் அரசு தங்களைப் புறக்கணிப்பதாக தலைநகர் மனாமாவில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலில் ஒருவர் பலியானார். அவரது இறுதிச் சடங்கு கடந்த செவ்வாய்க்கிழமை மனாமாவில் நடந்தது.

அதில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார். இரண்டாவதாகப் பலியானவரின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் நடந்தது. அதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். கடந்த மூன்று நாட்களாக மக்கள் மனாமாவில் உள்ள சதுக்கத்திலேயே தங்கியிருந்தனர்.

இதற்கிடையில் பிரதான எதிர்க்கட்சியான அல் -வெபக் பாராளுமன்றில் இருந்து வெளியேறப் போவதாக அறிவித்துள்ளது. பக்ரைனில் உடனடியாக அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அக்கட்சி வலியுறுத்தியுள்ளது. (ஸ்ரீ)

# கிளர்ச்சியாளர்கள் மீது கடும் நடவடிக்கை

## ஈரான் எச்சரிக்கை

அரசுக்கு எதிராக மேலை நாடுகளின் தூண்டுதலின் பேரில் கிளர்ச்சியைத் தூண்டிவிடும் எதிர்ப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என ஈரான் எச்சரித்துள்ளது.

இதனிடையே கிளர்ச்சிக்கு காரணமான தலைவர்களை தேசத்துரோக குற்றம் சாட்டி தூக்கிலிடவேண்டும் என்று ஈரான் எம்.பிக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆயினும் இந்த மிரட்டலுக்கு எல்லாம் அஞ்சமாட்டோம் என கிளர்ந்தெழுந்துள்ளனர். இது தலைவர்களான மீர் உசைன் மொசாவி, மெஹிதி கரோபி ஆகியோர் அரசுக்கு எதிராக புதிய பேரணி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். இந்த இரு தலைவர்களுமே ஜனாதிபதி மெஹ்மூத் அகமது நிஜாத் தலைமையிலான அரசில் முக்கிய பொறுப்பு வகித்தவர்கள்தான்.

தற்போது நிஜாத் தலைமை நீடிப்பதை இரு தலைவர்களும் விரும்பவில்லை. இதற்கான மக்களை திரட்டி அரசு எதிர்ப்பு போராட்டத் தை நடத்துகின்றனர். இந்நிலையில் திங்கட்கிழமை நடந்த அரச எதிர்ப்பு கிளர்ச்சியின்போது, உயிரிழந்த மாணவர் ஒருவருக்கு அஞ்சலி செலுத்த பல்கலைக்கழகம் அருகே ஏராளமானோர் புதன்கிழமை திரண்டனர். அப்போது அரசு எதிர்ப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல் மூண்டது.

கிளர்ச்சியை தூண்டி விடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். திங்கட்கிழமை நடந்த போராட்டத்தின் போது கைதானவர்கள் பலர் உடனடியாக விடுதலை செய்யப்பட்டனர் மேலும் பலர் கைது செய்யப்பட உள்ளனர் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ஸ்ரீ-2)




# படகில் படகு கவிழ்ந்து 51 சோமாலியர்கள் பலி

(மபுடோ)

கடல் வழியாக சட்டவிரோதமாகக் குடியேறச் சென்றபோது மொசாம்பிக் கடற்பகுதியில் படகு கவிழ்ந்ததில் 51 சோமாலியர்கள் தண்ணீரில் மூழ்கி இறந்தனர். கடந்த 5 ஆம் திகதி சோமாலியாவிலிருந்து தான்சானியருக்கு சொந்தமான படகு ஒன்றில் 129பேர் பிறநாட்டில் சட்டவிரோதமாகக் குடியேறப் புறப்பட்டனர். சோமாலியாவைச் சேர்ந்த 89 பேர் மற்றும் 40 எதியோப்பியர்கள் உட்பட 129 பேர் அந்தப் படகில் பயணம் செய்தனர்.

இந்தநிலையில் மொசாம்பிக் கடற்பகுதியில் வீசிய பலத்த காற்றால் கடல் சீற்றம் காணப்பட்டது. இராட்சத அலையில் சிக்கிய படகு கவிழ்ந்தது. படகு 10 நாட்களுக்கு முன் நடந்த இந்த விபத்தில் 51 பேர் இறந்தனர். உயிர் தப்பியவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டு நம்புலா அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளோம் என்று மொசாம்பிக் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஸ்ரீ)

# கையில் 12 விரல்களுடனும் காலில் 14 விரல்களுடனும்

## பிறந்த பெண் குழந்தை



மியான்மரில் ஒரு பெண் குழந்தை கையில் 12 விரல்களுடனும் காலில் 14 விரல்களுடனும் பிறந்துள்ளது. இதன்மூலம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறவுள்ளது. மியான்மரைச் சேர்ந்த பெண் பியோ மின்மின் சோ (26) என்பவருக்கு லீயதி மின் என்ற பெண்குழந்தை பிறந்தது. வழக்கத்துக்கு மாறாக இந்தக் குழந்தையின் கையில் 12 விரல்களும் காலில் 14 விரல்களும் உள்ளன. பிறந்து 16 மாதமாகி உள்ள இந்தக் குழந்தையின் குடும்பம் வறுமை நிலையில் உள்ளது.

எனக்குக் குழந்தை பிறந்தவுடன் கை கால்களுடன் குறையின்றி பிறந்துள்ளதா? எனத் தாதியிடம் கேட்டேன். அதற்கு தேவைக்கும் அதிகமாகவேயுள்ளது என அவர் பதிலளித்தார். கூடுதல் விரல்களுடன் பிறந்ததைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இது அவருக்கு கூடுதல் பலம்என பியோ தெரிவித்துள்ளார். பியோ தனது குழந்தையை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

தற்போது இந்தியாவைச் சேர்ந்த இருவர் தலா 12 விரல்கள் மற்றும் 13 கால் விரல்களுடன் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளனர். கூடுதல் விரல்களுடன் குழந்தை பிறப்பது பாலிடக்டிலிசம் எனப்படுகிறது. இது வழக்கத்துக்கு மாறானது. அதிலும் லீயைப் போல கை கால்களில் கூடுதலாக உள்ள அனைத்து விரல்களும் செயற்படுவது மிகவும் அரிதானது என டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

# இன்னும் ஆறு மாதங்களில் புதிய ஜனாதிபதியிடம் ஆட்சியை ஒப்படைப்போம்

## எகிப்து இராணுவத் தளபதிகள் அறிவிப்பு

எகிப்து நாட்டில் முபாரக் ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது. இதன் காரணமாக ஜனாதிபதி முபாரக் நாட்டை விட்டு தப்பி ஓடிவிட்டார். இராணுவ தளபதிகள் ஆட்சியை கைப்பற்றி நிர்வாகத்தை கவனித்து வருகிறார்கள்.

இந்தநிலையில் முபாரக்குக்கு எதிராக போராட்டத்தை நடத்திய மக்கள் பிரதிநிதிகள் கெய்ரோ நகர சதுக்கங்களில் இருந்து வெளியேறாமல் முழு ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை தொடர்ந்து சதுக்கங்களில் தான் இருப்போம் என்று கூறி வருகிறார்கள்.

இதற்கிடையில் இராணுவத் தளபதிகளின் கவுன்சில் வெளியிட்டு உள்ள அறிக்கையில் தேர்ந்து எடுக்கப்பட்ட ஜனாதிபதியிடம் 6 மாதங்களுக்குள் ஆட்சியை ஒப்படைப்போம் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் தேர்தல் அமைதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறும் என்றும் இராணுவத் தளபதிகள் ஆட்சியில் நீடிக்க மாட்டார்கள் என்றும் தற்போதைய நிலைமை இராணுவத்தின் மீது திணிக்கப்பட்டுள்ளது என்றும் அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தமிழர்களினதும் தமிழ் நிலத்தினதும் ஆவணங்களை பேணிப்பயன்படுத்தும் எண்மிய நூலகத் திட்டம்.

நூலகம் எனும் மின்நூல் உருவாக்கத்திற்கான அமைப்பு யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் கால்பதித்துள்ளது. இப்பணியை மேற்கொள்வதற்கான வளவாளர் பயிற்சி வகுப்புகள் 15.02.2011 செவ்வாய்முதல் மூன்று நாட்களுக்கு வண்ணார் பண்ணை இரத்தினம் வீதியில் அமைந்துள்ள சிந்தனைக்கூட கேட்போர்கூடத்தில் இடம் பெற்றது. நூலகத்திட்டத்தின் யாழ்ப்பாணப்பிரதேச இணைப்பாளராக பணியாற்றும் பேராசிரியர் இரா.சிவசந்திரன் தமிழர் மின்நூலகத்தின் தேவை, வலைத்தளத்தின் வரலாறும் செயற்பாடும், அதன் பயன்கள், எழுத்தாளர்களும், ஆர்வலர்களும் இப்பாரிய பணிக்கு எவ்வகையில் பங்களிக்க முடியும். என்பனபற்றி பயிற்சியின் ஆரம்ப உரையாற்றுகையில் விபரமாக எடுத்துரைத்தார்.

தகவல் வளங்களை எண்மிய (Digital) வடிவத்தில் கொண்டுள்ள நூற்றொகுதியை எண்மிய நூலகம் என வழங்குகின்றோம். எமது நூலகத்தின் இணைய முகவரி www.noolaham.org என்பதாகும்.

இன்று உலகம் அறிவை அடிப்படையாகக்கொண்ட அறிவுமைய உலகமாக மாறிவருகின்றது. தரவுகள் ஒழுங்கமைக்கப்பட்டு தகவலாகமாறி அறிவுக்கான அடித்தளத்தை உருவாக்குகின்றன. அறிவின் ஒரு உயர்ந்த நிலையே ஞானமாகும். இதுவே அறிவின் பரிணாமமாகும்.

இன்று அறிவுசார் பொருளாதாரம், அறிவுசார் ஊழியம் என்பதாக ஓர் அறிவுப்புரட்சி யுகம் உருவாகி வருகின்றது. சமூகவரலாறு காட்டும் விவசாய புரட்சி, கைத்தொழில் புரட்சி போல் அறிவுப் புரட்சி மூலமாகவே எமது சமூக பொருளாதார கலாசாரத்தை வலுவுள்ளதாக கட்டியெழுப்ப முடியும். இந்நிலையை எய்துவதற்கு எமது தமிழ்மக்களுக்கு பணியாற்றவே எண்மிய நூலகத் திட்டத்தை துரிதமாக வளர்த்தெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

தமிழில் சமகால அறிவு பகிரப்படும் மிகமுக்கிய வலைத்தளங்களில் ஒன்றாக நூலக இணையத்தளம் விளங்குகின்றது. எதுவித இலாபநோக்கமற்ற கூட்டுமுயற்சியான இது 2005 தைப்பொங்கல் தினத்தன்று திரு க.சசீவன், திரு ரி.கோபிநாத் போன்றவர்களின் ஆர்வத்தால் உருவாக்கப்பட்டது. முதலாம் ஆண்டு பல்கலைக்கழக மாணவர்களாக இருந்த இவர்களின் இவ் ஆக்கபூர்வமான சிந்தனையும் செயற்பாடும் பின்னர் விரிவடைந்து நூலக நிறுவனமாக மாற்றப்பட்டு திரு பத்மநாப ஐயர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, சர்வதேச கிளைகளையும் உருவாக்கி இயங்கி வருகிறது. 2010 நவம்பர் வரை இந்நூலக வலைத்தளத்தில் 79000 வரையான இலங்கைத்தமிழ் எழுத்தாவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1700க்கு மேற்பட்ட எழுத்தாளரது நூல் விபரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. நூல்கள், இதழ்கள், பத்திரிகைகள், சிறு பிரசுரங்கள், ஆய்வேடுகள், நினைவு மலர்கள், விழா மலர்கள், ஆய்விதழ்கள், பாடசாலை மலர்கள், உள்ளிட்ட எமது மண்ணிற்குரிய சகல விதமான எழுத்தாவணங்களும் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன. மாதம் தோறும் 200-300 புதிய மின் நூல்கள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. PDF முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்நூல்களை எழுத்தாளர் பெயர் கொண்டும், ஆண்டு ரீதியாகவும், வெளியிட்ட பதிப்பாளர் விபரங்களைக்கொண்டும், மற்றும் நூல்வகைரீதியாகவும் தேடிப் பெறலாம். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் தேடவும் உலாவவும் இயலும்.

இந்த மின் நூலகத்தின் பயன்கள் அளப்பரியன. எமது வரலாறு, இலக்கியம், பண்பாடு, சமயங்கள், கலைகள், நாட்டார் வழக்காற்றியல் உள்ளிட்ட அனைத்தும் ஆவணப்படுத்தப்படுகின்றன. அழியும் நிலையில் உள்ள எழுத்தாவணங்கள் அடுத்த தலைமுறைக்குக் கிடைக்கும் வண்ணம் பேணிப் பாதுகாக்கப் படுகின்றன. ஆய்வாளர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் நூலகம் ஓர் அறையினுள் ஒளிர்ந்து அளப்பரிய கல்விச்சேவையை ஆற்றுகின்றது. உலகில் எந்த இடத்தில் வாழ்வோரும் எத்தொகை யினரும் ஒரே நேரத்தில் எந்நேரமும் பெற்றுப் பயன்பெறமுடிகின்றது.

இணையத்தள வருகைக்கணிப்பான் மூலம் தினமும் 450 இற்கும் அதிகமானோர் இந்நூலகத்தை பயன்படுத்துவது தெரியவருகின்றது. இந்தியா, இலங்கை வாசகர்கள் பெருந்தொகையாகவும் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்து கனிசமான தொகையினரும் பார்வையிடுவது தெரிகின்றது. எண்மிய நூலகத்திலே எமக்குத் தேவையான தகவல்களை இலகுவாகவும், வேகமாகவும், எந்நேரமும், எந்நாட்டிலிருந்தும் பயன்படுத்த முடியும்.

எனவே எமது தமிழ் சமூகத்தின் மேம்பாட்டிற்கு இன்றியமையாத மின்நூலகத்தின் வளர்ச்சிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து நூலகங்களும், தனிப்பட்டமுறையில் நூல்களை சேகரித்து வைத்திருப்போரும் நூல்களைத் தந்து உதவமுடியும். மின்பிரதியாக்கப்பட்ட பின்னர் அந்நூல் பிரதிகள் அவர்களிடம் திரும்பவும் ஒப்படைக்கப்படும். எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், இதழாசிரியர்கள், அவர்களது வெளியீடுகளையும் எண்ணிமமாக்கும் அனுமதியுடன் அனுப்பி உதவமுடியும். நூலக வலைத்தளத்தை மாணவர்முதல் ஆர்வலர்கள் அனைவரும் பரவலாக அறிமுகப்படுத்தி அதன் பயன்பாடு அனைவருக்கும் கிடைக்க உதவிசெய்யலாம். நிதிமிகுந்தவர் நூலக நிறுவன செயற்பாடுகளுக்கு நிதியுதவி வழங்கி ஊக்குவிக்கலாம்.

எதிர்காலத்தில் இந்த நூலகத்தில் எமது கல்வி, பண்பாட்டு அம்சங்களை ஒளி, ஒலி வடிவிலும் ஆவணப்படுத்தும் திட்டம் உண்டு. இலங்கைத் தமிழரின் பூரணமான எக்காலத்தேயும் அழிக்க முடியாத நூலகமாக இதனை உருவாக்குவதற்கு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

பேராசிரியர் இரா.சிவசந்திரனின் அறிமுக உரையைத்தொடர்ந்து, மின் நூலகத்தின் நிறுவனத்தின் தலைவர் திரு.பத்மநாப ஐயரினதும் இத்திட்டத்தின் பணிப்பாளர் திரு.கணேசானந்தன் சசீபன் அவர்களதும் உரைகள் ஐக்கிய இராச்சியத்திலிருந்து "ஸ்கைப்" மூலம் அஞ்சல் செய்யப்பட்டு ஒளிபரப்பப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**பேராசிரியர் இரா.சிவசந்திரன்**

# சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பினான்ஸ் நிறுவனத்திற்கு கடந்த 9 மாதங்களில் ரூ. 331 மில்லியன் இலாபம்.

2010 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் முக்கிய செயற்பாட்டு குறிகாட்டிகளின் தொடர்ச்சியான முன்னேற்றத்தினால், சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் லிமிட்டட் (CDB) நிறுவனமானது 2010 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க இலாப வளர்ச்சியை பதிவு செய்வதற்கு இயலுமாகியுள்ளது.

நிறுவனத்தின் வரிக்கு முன்னரான இலாபம் 93.8 வீதத்தினால் அதிகரித்து 331.7 மில்லியன் ரூபாயாக உயர்வடைந்தது. இது கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் 31.9 மில்லியன் ரூபாயாக இருந்தது. அதே நேரம் வருமானம் 1492 மில்லியன் ரூபாயை எட்டியதன் காரணமாக அதன் வளர்ச்சியானது கடந்த வருடத்தை விடவும் 35 வீதம் அதிகமானதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

CDB நிறுவனத்தின் இந்த மாற்றம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அதன் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மஹேஷ் நாணயக்கார 21 ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தமானது குறிப்பிடத்தக்க மாற்றங்களை வெளிப்படுத்தியுள்ளதுடன், இலங்கையின் நிதிச் சேவைகள் துறையில் பலம்மிக்க முன்னணிச் செயற்பாட்டாளராக CDB நிறுவனத்தை நிலை நிறுத்தியுள்ளது. அனைத்து நிதிசார் தரவுகளிலும் பிரதிபலிப்பது போலவே இத்துறையில் 2001 ஆம் ஆண்டில் சிறியதொரு நிறுவனமாக இருந்த CDB ஆனது 2010ஆம் ஆண்டில் மிக முக்கியமான பலம் பொருந்திய நிறுவனமாக வளர்ச்சி கண்டுள்ளமை மிகவும் குறிப்பிடத்தக்க விடையமாகும். 2001 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், CDB நிறுவனத்தின் மொத்த சொத்துக்களின் பெறுமதியானது 276 மில்லியன் ரூபா என்ற குறைந்த மட்டத்திலிருந்து 9 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. வருடாந்த வருமானம் 25 மிலல்யன் என்ற குறைவான மட்டத்திலிருந்து சுமார் 2 பில்லியன் ரூபாயாக உயர்வடைந்துள்ளது. 2001 ஆம் ஆண்டில் பாதகமான (மறை) பெறுமானமாக பதிவு செய்யப்பட்ட தேறிய சொத்துக்கள், சாதகமாக மாற்றமடைந்து 800 மில்லியன் ரூபாயாகியுள்ளது. 2001 ஆம் ஆண்டில் நட்டமடையும் நிலையில் இருந்த CDB நிறுவனமானது 2004 முதல் இலாபம் உழைக்கும் விடையத்தில் தொடர்ச்சியான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளதுடன், நடப்பு நிதியாண்டின் (2010/2011) முதல் ஒன்பது மாதங்களில் ஆச்சரியப்படத்தக்க வகையில் தேறிய இலாபமாக 300 மில்லியன் ரூபாயினைப் பெற்றுக்கொண்டுள்ளது. RAM Rating (Lanka) Ltd. இனால் CDB நிறுவனம் BBB-/P3 கடன் தரப்படுத்தலை அண்மையில் பெற்றது. உயர்ந்தமட்ட நிதிப் பெறுபேறுகளில் அதே உத்வேகத்துடன் இந்த நிதியாண்டை (2010/2011) பூர்த்திசெய்வதில் நாம் நம்பிக்கையுடன் உள்ளோம் என்றார்.

CDB நிறுவனத்தின் சிரேஸ்ட சந்தைப்படுத்தல் முகாமையாளர் கார்த்திக் இளங்கோவன் நிறுவனத்தின் வியாபார அபிவிருத்தி தொடர்பாக கூறுகையில் 2011 ஆம் ஆண்டில் பாரிய அபிவிருத்தியைப் பெறுவதற்கு இலங்கை தயாராக உள்ளது. 2010 இல் நாம் மிக அதிக எண்ணிக்கையிலான உல்லாசப் பயணிகளின் வருகையைப் பதிவு செய்துள்ளோம். அதாவது 6 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கும் அதிகமாக உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்ததன் மூலம், அதில் 46 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் ஒரு ட்ரில்லியன் ரூபாயாக காணப்பட்ட கொழும்பு பங்குச் சந்தையின் சந்தை மூலதன வாக்கம் 2.2 ட்ரில்லியன் ரூபாயாக அதிகரித்தது. இந்நிலையில் எமது மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 2011 இல் அண்ணளவாக 8.5 வீதமாக இலக்கிடப்பட்டுள்ளது. இவையெல்லாம் எமது நாட்டின் எதிர்கால பொருளாதாரத்திற்கு சாதகமானவையாக தென்படுகின்றன.

இவ்வாறு முழுமையான பொருளாதார திருப்பம் ஏற்பட்டுள்ள நிலையில் ஊழியர்களின் பங்களிப்பு மூலம் கொண்டு நடாத்தப்படும் நிறுவனம் என்றவகையில் மிகவும் போட்டித்தன்மை மிக்க சந்தைச் சூழலிற்குள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதே எமது நோக்காகும். இந்த எண்ணக்கருவானது கடந்த தசாப்தம் முழுவதும் எம்மால் வலியுறுத்தப்பட்டு இன்று நாம் ஒரு ஊழியர் நலம்சார் நிறுவனமாக வளர்ந்துள்ளோம். கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட முன்னைய ஐந்தொகைத் திகதியுடன் ஒப்பிடுகையில், தற்போது எமது மொத்த வைப்புத் தளமானது 6.7 பில்லியன் ரூபாவான 39 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

கிராமியத் துறையினருக்கான மொத்த நிதிவசதியளிக்கும் நிறுவனமாக செயற்படுவதற்கான எமது வர்த்தக உபாயத்திற்கு மக்களை முன்னிலைப்படுத்திய பல்வேறுமட்ட விநியோக வலையமைப்பின் மூலம் மிகவும் ஒத்துழைப்புவழங்கப்படுகின்றது. இணையத் தொடர்புகளைக் கொண்ட 33 கிளை வலையமைப்பை நாடெங்கும் விஸ்தரிப்பதற்கு இது எம்மை இயலுமாக்கியுள்ளது. நாட்டின் அனைத்து மாகாணங்களிற்குமிடையிலும் மேலும் சமமான அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியடையும் என எதிர்பாக்கப்படுகின்ற நிலையில், புவியியல் ரீதியாக தமது கிளைகளை விஸ்தரிக்கவும் CDB நிறுவனம் திட்டமிட்டுள்ளது. நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள விஷேடத்துவம் வாய்ந்த வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் விஷேடத்துவம் வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்காக இலங்கை மத்திய வங்கியினால் அண்மையில் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, வெளிநாட்டுநாணயமாற்று (அங்கீகாரம் பெற்ற நாணயமாற்று முகவர்)



நடவடிக்கைகளை ஊக்குவித்த மற்றும் ஆரம்பித்துள்ள முதலாவது நிறுவனமாக CDB திகழ்கின்றது. CDB நிறுவனம் ஹற்றன் நஷனல் வங்கியுடன் இணைந்ததன் ஊடாக மணிகிராம்என்றவெளிநாட்டுநாணயசெலாவணி சேவையை ஏற்கனவே ஆரம்பித்து விட்டது. அத்துடன் 2011/12 நிதியாண்டின் முதல் காலாண்டுப்பகுதியில் சேமிப்புக் கணக்கினை அறிமுகப்படுத்தவும். CDB திட்டமிட்டுள்ளது என்றும் கார்த்திக் மேலும் கூறினார்.

நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள, ஒழுங்குபடுத்தப்பட்ட 36 நிதிநிறுவனங்களிடையே மொத்தச்சொத்துக்களின் அடிப்படையில் தற்போது CDB நிறுவனமானது ஏழாவது இடத்தில் உள்ளது. கொழும்புப் பங்குச்சந்தையின் பிரதான தளத்திலும் CDB நிறுவனப் பங்குகள் பட்டியல் இடப்பட்டுள்ளன.

யுத்தம் முடிவடைந்தபின்னர் இலங்கையில் நிலைமைகள் மாற்றமடைந்து வருவதுடன், பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டு வருகின்றது. இதனால் முன்னொருபோதும் இல்லாத வாய்ப்புக்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் உருவாகியுள்ளன. இவற்றைப்பயன் படுத்திக் கொள்வதற்கான சிறந்த எதிர்பார்ப்புக்கள் மற்றும் இலட்சியத்துடன் 21ஆம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்தில் CDB நிறுவனம் காலடியெடுத்து வைக்கிறது.

**விளம்பர விபரணம்**





யுனிசெப் அனுசரணையுடன் வடமாகாண பாடசாலைகளுக்கு தளபாட விநி யோகம் பற்றிய கலந்துரையாடல் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வடமாகாண கல்வித்திணைக்கள கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் யுனிசெப் விநியோக அதிகாரி டி.அன்ரு விளக்கவுரை வழங்குவதையும் அருகில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதை யும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# சக பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் திருடியதாக கான்ஸ்டபிள் ஒருவர் கைது

(கொழும்பு)

சக பொலிஸ் உத்தியோகத்தர்களிட மிருந்து பணம், வங்கி ஏ.ரி.எம்.அட்டை, கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை திருடிய குற்றச்சாட்டில் அநுராதபுரத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

ஏ.ரி.எம்.அட்டையையும் பணப்பையை யும் பறிகொடுத்த மற்றொரு கான்ஸ்டபிள் செய்த முறைப்பாடு தொடர்பாக நடைபெற்ற விசாரணையின் போதே குறித்த கான்ஸ்ட பிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட ஏ.ரி.எம். அட்டை மூலம் சந் தேக நபர் 5ஆயிரம் ரூபா பணத்தை வங்கி யிலிருந்து மீளப் பெற்றுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதுபோன்ற பல சம்பவங்களுக்கு தான் காரணமாக இருந்ததை சந்தேகநபர் விசா ரணையின் போது ஒப்புக்கொண்டுள்ளார்.

கலென்பிந்துனுவேவ பிரதேசத்தின் மீகொடவெள பகுதியைச் சேர்ந்த மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள் இரு வருடங்களுக்கு முன்னர் பொலிஸ் சேவையில் இணைந் தார்.

இதேவேளை அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதி ஒருவர் சந் தேக நபருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள் ளப்படுவதை தடுக்க முயன்றதாகவும் அநு ராதபுரம் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். (ஸ்ரீ-2)

# உறவினர்கள் அற்ற பிள்ளைகளை சமுகமயப்படுத்தும் வேலைத்திட்டம்

(கொழும்பு)

உறவினர்கள் அற்ற நிலையில் வாழ்ந்து வரும் பிள்ளைகளை சமுகமயப்படுத்தும் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்தியுள்ள தாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யின் தலைவி அனோமா திஸாநாயக்கா இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய உறவினர்கள் அற்ற பிள் ளைகளை அதிகார சபை பொறுப்பேற்று வரு வதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்பின்னர் அந்தப் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்குவதே தமது எதிர்பார்ப்பு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே அவர்களுக்குத் தேவை யான வீடு மற்றும் ஏனைய உதவிகளை மேற் கொள்வதற்கு சகல தரப்பினரும் முன்வர வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத் துள்ளார். (ஸ்ரீ-9)

# குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் முன்னெடுப்பு

குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்றை முன் னெடுக்க சுற்றாடல் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதற்காக செக் குடியரசுடன் இணைந்த வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க இருப்பதாக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் செக்குடியரசின் இலங்கை தூதுவருக்கும் சுற்றாடல் துறை அமைச்ச ருக்குமிடையிலான சந்திப்பு இடம் பெற்றுள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-9)

# டோகாவில் இலங்கையருக்கு ஏழு வருட சிறைத் தண்டனை

தனது நாட்டைச் சேர்ந்த ஒருவரை அடித் துக் கொலை செய்த இலங்கையர் ஒரு வருக்கு டோகா நீதிமன்றம் 7 வருட சிறைத் தண்டனை வழ ங்கியுள்ளது.

இறந்தவரின் குடும்பத்திற்கு 2 இலட்சம் ரியால் நட்டஈடாக வழங் கப்பட வேண்டு மென இவருக் குக் கட்டளையிட் டது.

வீட்டுப்பணிப் பெண் ஒருவர் மீது இருவரும் காதல் கொண் டதால் ஏற்பட்ட சண்டையில் ஒருவர் பலியாகி யுள்ளார்.

கள்ளத்தொடர் பில் ஈடுபட்டதற் காகபணிப்பெண் ணுக்கும்கொலை செய்த வருக்கும் 3 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள் ளதாகவும் சிறை வாசம் முடிந் ககம் இவர்கள் நாடு கடத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்படு கிறது. (ஸ்ரீ-2)

## 5 ஆம் மாத நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 17 |
| 08 | 09 |
| 1956 | 2010 |



### அமரர் சந்திரசேகரம் பவானிதேவி

குளிப்பாட்டி தலைசீவி பொட்டிட்டு அழகு பார்த்து
எமை அன்பாய் பள்ளிக்கு அனுப்பிவைத்த அன்னையே
எமை விட்டு நீர் சென்ற இடம்தனை தேடுகின்றோம்
இனி எங்கே அம்மா உமைக் காண்போம்
வரமாட்டீரோ எமைக் காண்பதற்கு?

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

(சி-2461)

## இலங்கை நூலகச் சங்கம்
## நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் - 1-2011/2012

### நேர்முகத்தேர்வு

நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 ற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் 19.02.2011 (சனிக்கிழமை) காலை 9.30 - மாலை 3.30 வரை நடைபெறவுள்ளது.

**குறிப்பு:**
இக் கற்கை நெறிக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் மேற்படி நேர்முகத்தேர்வுக்கு உரிய ஆவணங்களுடன் தோற்றமுடியும்.

**தகைமைகள்:**

* க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தி அல்லது உயர் கல்வித் தகைமைகள்

**அல்லது**

* க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நூலகம் ஒன்றில் மூன்று வருட (03) தொழில் அனுபவம்.

**மொழி மூலம் : தமிழ் (யாழ்ப்பாண நிலையத்தில்)**
**கற்கைநெறிக் கட்டணம் : ரூ 10,000.00**

திருமதி.கல்பனா சந்திரசேகர்,
ஒருங்கிணைப்பாளர்/யாழ். நிலையம்,
இலங்கை நூலகச் சங்கம்.

(3831)

# ஆளுநரின் விசேட உதவித் திட்டத்திற்கு தெரிவான பல்கலை. மாணவர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2008/2009 கல்வியாண்டில் பயின்று வரும் வன்னியில் பாதிக்கப்பட்ட 189 மாணவர்கள் வடமாகாண ஆளுநரின் விசேட உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான உதவிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும் நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இவ் உதவித் திட்டத்திற்கு தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு,

**கலைப் பீடம்**

எஸ்.யாழினி, எஸ். பிரணந்தன், திருமதி ஏ.தர்ஷினி, திருமதி வை. சுதர்சினி, திருமதி கே. புஸ்பா, எஸ். நகுலாதேவி, திருமதி எஸ். சுதர்ஜினி, வி. உஷா, கே. சுலோதினி, வி. நிவேதிகா, என். ஜெயமலர், திருமதி தி. நந்தா, திருமதி எஸ். கலைவாணி, திருமதி வி. விஜிதா, சி.அருள்ஜோதி, ஜே. மேனகா, எம். அபிராமி, பி. ரதீபன் , வி. சிவராசா, என். சோமசுந்தரராஜன், எஸ். பிருந்தா, பி. சுபத்திரா, எஸ். தர்மினி, வி. வசந்தன், ஜி.ஸ்ரீகாந்தா, திருமதி ஜி. காஞ்சனா, எஸ். ஜெகன், எஸ். நிருபராஜ், திருமதி. கே. வசந்தினி, திருமதி ஆர். ரோகினி, எஸ். சுதர்ஜினி, திருமதி ஏ. பாஜினி, திருமதி எஸ். நிரஞ்சினி, எஸ். சாந்திமலர், என். சசிகுமார், வி. வைகுந்தன், பி. கஜாலினி, ஏ. ரஞ்ஜிதன், எஸ். வினோதினி, திருமதி எஸ். சிவதர்ஷினி, திருமதி வி. கலாவதி, திருமதி எஸ். ஜெசிதா, திருமதி ஆர். சுதாயினி, திருமதி வி. மதுராந்தி, திருமதி கே. விஜிதா, திருமதி எஸ். நிஷாந்தி, எஸ். சுவேந்தி, திருமதி வி. தீபனா, ஏ. மேரிமரியஸ்ரெலா, திருமதி பி. சுதர்ஜினி, ரி. பிரதீபன், கே. நிஷாந்தினி, ஏ. கோஜலா, எவ். பிறின்சிலி சுஜிதரன், திருமதி ஜே. கனிஸ்ரா, வை. வின்சிகா, கே. சாளினி, எஸ். சுஜிதா, திருமதி கே. பபிதா, வி. வளர்மதி, கே. சத்தியகலா, திருமதி ரி. தவராணி, திருமதி ஜே. குயின்சி, திருமதி எம். சங்கீதா, எஸ். சசிகலா, திருமதி ஆர் மேகலா, திருமதி பி. சுவீடா, ஆர். கிஷாந்தி, ஆர். விதுஷா, ஜே.பிரதீபா, கே. விக்னா, கே. ஐங்கரன், எஸ். கஸ்தூரி, கே. விக்னேஸ்வரன், திருமதி ஜி. கிறிஸ்ரீனா, டி. நிறைஞ்ஜனா, பி. அனிதா, வி. சிறீகரன், ஜே. ஜெயகிருஸ்ணா, திருமதி ஏ. மேரிசெல்வரஞ்சினி, கே. தர்ஷினி, எஸ்றமணி, எஸ். தர்ஷிகா, ரி. அருள்வேந்தன், கே. கௌதமன், எஸ். சத்தியசீலன், பி. கமலேஸ்வரன், கே. சுபராஜ், எஸ். கஜோதீபன், பி. ஸ்ரீபன், ரி. செந்தில்குமார், திருமதி எஸ். நிசாந்தினி, எஸ். பிரசாந்தி, திருமதி எஸ். அருள்வதனி, திருமதி வை. விமலேஸ்வரி, திருமதி ஜே. மேரிகிரிசா, ரி.சுரேஸ்குமார், திருமதி ஏ. நிஷாந்தினி, திருமதி ஆர். துசியந்தி, ஏ. சாந்தினி, எம். சியாமளா, கே.புஸ்பாகரன், ரி. தர்சனா, எஸ். சயந்தா, எம். சுதர்சினி, எம். சுவைதா, ரி. யாழினி, எம். லோஜினி, ரி. நித்தியானந்தன், பி. ஜெசிந்தினி, ஜி.ஸ்ரீசுபாசினி, ரி. சசிகுமார், எஸ். விஜிதா, ஏ. பாபியோலா, எஸ். உமாபிரியா, வை. நவதரன், எஸ். கஜேந்திரன், ரி. செல்வகுமார், எஸ். பிரதீபன், பி. சுதாகரன், திருமதி. ஏ. மைதிலி

**மருத்துவ பீடம்**

திருமதி எஸ். சுமந்தி, திருமதி பி. வைஸ்ணவி, என். கிருஷாந், எம். சாந்தமேனன்

**முகாமைத்துவபீடம்**

எஸ்.சுகந்தினி, ஆர்.சிவகுமார், திருமதி. எம்.கலிஸ்ராசெரோமி, ரி.தனரஞ்சன், கே.பிரபாகரன், எம்.சுமன், பி.மனோராஜ், எஸ். சுரேஷ், ஆர். கிரிஷா, திருமதி. ஏ. அனுசுகா, கே.கேதீஸ்வரி, திருமதி.எம். கஜீவனா, எம். மஜீபன், எஸ்.அனுசியா, எஸ்.பிரதீபா, எஸ். கீரன். ஆர்.ரோசிகா, ரி.சபேஸ்மோகன், கே.பரமானந்தன், ரி.அருள்குமரன், எஸ்.பிருந்தா, எஸ்.ஞானகுமார், எஸ்.கஜீபன், வி.தமிழ்ச்செல்வி, கே.ஜெயசுதன், எஸ்.மயூரன்

**விவசாயபீடம்**

பி.சுகிர்தன், எஸ்.சசிகலா, பி.வாசுகி, ரி.குகாஸ்நதினி, என்.நித்தியா, திருமதி. ஏ.சுமித்திரா, கே.சார்னகன்

**விஞ்ஞானபீடம்**

திருமதி.எஸ்.சுபரஜனி, வி.றமேஸ், ஏ.ஜோண்ஜிதன், வி.துவாரகா, ஜி.கிருஷ்ணபிரியா, பி.ரகுதரன், எஸ்.ஜெபோர்சன், வி.தீபன், ரி.சுலக்ஷன், எஸ்.தமிழ்வாசன்

**சித்தமருத்துவ பீடம்**

ரி. காயத்திரி, கே.ரெஜிந்தன்

**உடற் கல்வித் திணைக்களம்**

எம். சுகந்தன், கே. மயூரன், ஆர். பத்மகுமார், பி. புண்ணியராஜா, எஸ். சர்மிளா

**சட்டதிணைக்களம்**

திருமதி.ஜி.பிருந்தா

✦ ✦ ✦

ரி. கவிதா, திருமதி ரி. கோமதி, எம். சிவரூபன், எஸ். நிசாந்தன், ரி. நிசாந்தன், எம். சுதேசினி, என். சுஜிதா, எஸ். சாந்த நிரஞ் சனா, கே. அருள்வதனி, எம். பௌஜியா, திருமதி. கே. விஜயலதா, கே. அருச்சுனா, என். காண்டீபன்.

(ஸ்ரீ-2-3)

## தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி

# டில்லியில் உள்ள இல. தூதரகம் முன்பு பா.ஜனதா ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)

சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி, பா.ஜனதா சார்பில் டில்லியிலுள்ள இலங்கைத் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யாவிட்டால், போராட்டம் தீவிரமடையும் என்று சுஷ்மா சுவராஜ் எச்சரிக்கை விடுத்தார். நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 112 மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து பா.ஜனதா கட்சி சார்பில் டில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் பா.ஜனதா மூத்த தலைவருமான சுஷ்மா சுவராஜ், இந்த ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உட்பட திரளான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசைக் கண்டித்தும் சிறை வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோஷங்களை எழுப்பினார்கள். இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு, சுஷ்மா சுவராஜ் ஏற்கனவே கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

சமீபத்தில் தமிழகம் வந்த அவர், படுகொலை செய்யப்பட்ட இரு மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து நிதி உதவி வழங்கினார். இந்தநிலையில் மீண்டும் 112 மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து சுஷ்மா சுவராஜ் கூறியதாவது,

இலங்கைப் படையினரால் இந்திய மீனவர்கள் துன்புறுத்தப்படுவது இரு நாடுகளுக்கு இடையேயுள்ள நல்லுறவைப் பாதி க்கும். இலங்கையில் அமைதியும் வளமும் பெருக வேண்டும்என்றுதான் நாங்கள் விரும்புகிறோம். ஆனால், இது போன்ற நிகழ்வுகள், இரு நாட்டு உறவில் பதற்றத்தை ஏற்படுத்திவிடுகின்றன.




சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு இலங்கை அரசு நடவடி க்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால், எங்கள் போராட்டத்தை மேலும் தீவிரப்படு த்துவோம். இந்திய மீனவர்களுக்கு எதிரான கொடுமையை பா.ஜனதாவோ, இந்திய அரசோ பொறுத்துக்கொள்ளாது என சுஷ்மா சுவராஜ் கூறினார். (ஸ்ரீ-2)

## இலங்கை தூதரகத்தை முற்றுகையிட முயன்ற பா.ஜ.க.வினர் 200 பேர் கைது



இலங்கை கடற்படையினரை கண்டித்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட முயற்சி செய்த தமிழக பா.ஜ.க. தலைவர் பொன் .இராதாகிருஷ்ணன் உட்பட 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

நாகையில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 112 மீனவர்களை இலங்கை கடற் படையினர் சிறை பிடித்துள்ளனர். இது தமிழகம் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இலங்கை கடற்படையின் அத்துமீறிய செயலைக் கண்டித்தும் இலங்கையில் சிறை பிடிக்கப்பட்டுள்ள 112 தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரியும் அந்நாட்டு தூதரகத்தை முற்றுகையிட முயற்சி செய்த தமிழக பா.ஜ.க தலைவர் பொ. இராதாகிருஷ்ணன் உட்பட 200 பேர் கைது செய்யப்பட்டனர். (ஸ்ரீ-2)

## மீனவர்கள் மீதான கைதை கண்டித்து நாகை மீனவர்கள் வேலை நிறுத்தம்

தமிழக மீனவர்கள் 112 பேர் இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து நாகையில் 10 ஆயிரம் மீனவர்கள் நேற்று முன்தினம் வேலை நிறு த்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாகை துறைமுகத்தில் இருந்து கடந்த 12 ஆம் திகதி நாகை, அக்கரைப்பேட்டை, செருதூர், கீச்சாங்குப்பம், காரைக்கால் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 112 மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

கடந்த 15 ஆம் திகதி அவர்கள் கரை திரும்பி இருக்க வேண்டும். ஆனால் மீன்பிடிக்க சென்றவர்கள் கரை திரும்பவில்லை. அவர்களை இலங்கை மீனவர்கள் கடற்படை உதவியுடன் சிறைப்பிடித்து யாழ்ப்பாணம் , பருத்தித்துறை பகுதிக்கு கொண்டு சென்று விட்டனர்.

இந்தச்சம்பவத்தைக்கண்டித்து நேற்று முன்தினம் காலை நாகை பாராளுமன்ற உறுப்பினரும் தி.மு.க. மாவட்ட செயலாளருமான ஏ.கே.எஸ். விஜயன் தலைமையில் நாகை மற்றும் 25 க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் மற்றும் தி.மு.க.வினர் நாகை துறைமுகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிங்கள கடற்படையினரின் அத்துமீறல்களை கண்டித்து நாகையை சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு உள்ளனர். நாகை தாலுகா மீனவர்கள் சுமார் 10 ஆயிரம் பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மீனவர்கள் தங்கள் படகுகளை துறைமுகத்தில் நிறுத்தி வைத்திருந்தனர். சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 112 பேரையும் விடுவிக்கும் வரை வேலை நிறுத்தம் தொடரும் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

வெல்லுக அறமும் மெய்மையும் பொறையும்,
வெல்லாமல் செல்லுக பாவம் பொய்மொழி கோபம்
தைத்தியர் குலமென... - வில்லி பாரதம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இதோ! அரசியல் மேடையில் புதிய தோர் நாடகம்!

மகா ஜனங்களே! இதோ! அரசியல் மேடையில் புதியதோர் நாடகம் அரங்கேறுகிறது.

பார்க்கத் தயாராகுங்கள்.

தலைசிறந்த நடிகர்கள்.

நடிப்பில் சிவாஜிகணேசனை விஞ்சியவர்கள் – பேச்சில் அறிஞர் அண்ணாத்துரையை வென்றவர்கள். பொய் சொல்வதில் மகாசூரர்கள். ஏமாற்றுவதில் மேதைகள். இணைந்து நடிக்கும் நாடகம் இதோ மேடை ஏறுகின்றது.

துரியோதனன் கெட்டவன்; சகுனி சூளுரைக்கும் படலம் நாடகம் இதோ! திரை விலகுகிறது.

**காட்சி: 1**

சகுனி:– துரியோதனா பாண்டவர்களை அழைத்து அவர்களோடு சூதாடி வெற்றிகொள்.

துரியோதனன்:– என்னருமை சகுனி மாமாவே உங்கள் ஆலோசனை பிரமாதம். நீங்கள் தரும் ஆலோசனைக்கு யான் என்ன கைமாறு செய்வது.

சகுனி:– துரியோதனா தேர்தல் தொகுதி ஒன்றில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு அனுமதி தா? அது போதும்.

துரியோதனன்:– மாமா! என்னிடம் பலர் வேட்பாளர்களாக இருக்கின்றனர். இருந்தும் உங்கள் ஆலோசனைக்காக ஒரு தொகுதியைத் தருகிறேன்.

சகுனி:– நன்றி துரியோதனா உன்னை மறக்கேன். துரியோதனன் நல்லவன். அவனே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியவன் இப்படியெல்லாம் பிரசாரம் செய்வேன்.

துரியோதனன்:– சகுனி மாமாவே நன்றி.

அறிவித்தல்;

துரியோதனனின் கட்சியில் போட்டியிட்ட சகுனி அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்று உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொள்கிறார்.

(துரியோதனனும் சகுனியும் வெற்றியைக் கொண்டாடுகின்றனர்)

**காட்சி: 2**

திரை விலகுகிறது.

அறிவித்தல்;

துரியோதனனின் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சகுனி கட்சிமாறி விட்டார்.

பொதுமக்கள் கருத்து:– எதுவாக இருந்தாலும் சகுனி இந்த வேலை செய்திருக்கக் கூடாது.

துரியோதனன்:– அங்குமிங்கும் நடந்தவண்ணம்ஏமாந்துபோனேன்... ஏமாந்துபோனேன்... சகுனி இப்படிச் செய்துவிட்டாரே. என் கட்சிப் பலம் குறைந்துகொண்டு போகும் வேளையில் இப்படி கழுத்தறுத்துவிட்டாரே. பரவாயில்லை சகுனிக்குப் பாடம் புகட்டுவேன்.

சகுனி:– துரியோதனன் கெட்டவன்... அவன் எதுவும் செய்வான். எப்படியும் செய்வான்... முன்பும் பலருக்குக் கெடுதி செய்தவன். இவ்வாறு சூளுரைத்த வண்ணம் சகுனி அங்குமிங்கும் நடக்கிறார்.

**காட்சி: 3**

துரியோதனனின் சபை கூடுகிறது. துரியோதனன் கோபத்தில் இருக்கிறார். உறுப்பினர்கள் துரியோதனனைக் குறைகூறுகின்றனர். துரியோதனா நீயே சகுனிக்கு தொகுதி கொடுத்தாய் இப்போது சகுனி அந்தப் பக்கம் பாய்ந்துவிட்டார். நீ எங்காவது பறந்து செல்.


துரியோதனன்:– அமைதி... அமைதி... சகுனி என்னைக் கெட்டவன் என்று சொல்லலாம். ஆனால் அந்தச் சகுனி கெட்டாரக் கெட்டவன். என்னை மட்டும் அவன் ஏமாற்றவில்லை. பலரை ஏமாற்றியுள்ளான். கோபம் தாளமுடியாமல் துரியோதனன் அழுகிறார். (அவை கலைகிறது). பொதுமக்கள் எதுவும் தெரியாமல் திகைக்கிறார்கள்.

அசரீதி;

மகா ஜனங்களே! நீங்கள் கண்ணைமூடி புள்ளடி போட்டீர்கள் உங்கள் புள்ளடிகளால் கௌரவர்கள் சபை புகுந்தனர். அதர்மம் ஓங்கும். தர்மம் வீழும். தோல்வி உங்களுக்கே. அடுத்த தேர்தலிலேனும் உங்கள் புள்ளடியை பொருத்தமானவர்களுக்குப் போடுங்கள்.

திரை மூடுகிறது.

# ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு அபூர்வ மனிதர்



ஸ்ரீராமகிருஷ்ணர் பரமஹம்சர் ஒரு அபூர்வ மனிதர். இன்று உலகில் ஆன்மீகப் பணியில் பல சந்நியாசிகளைப் பற்றி படித்திருக்கின்றோம். அவர்களில் சிலர் பல நாடுகளுக்கு செல்கின்றனர். இவர்களுக்கு ஆயிரம் ஆயிரம் பக்தர்கள் உண்டு. ஸ்ரீராமகிருஷ்ணர் படிப்பறிவு சிறிதும் இல்லாதவர். அவர் காளி தகினேசுவர கோவிலில் கடுந்தவம் 12 வருடங்கள் ஆற்றி அன்னைபவதாரணியின் காட்சியும் திருவருளும் நிரம்பப் பெற்றவர். தனது கையெழுத்தையே

## இன்று சுவாமி ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜெயந்தி தினம்

சரிவரப்போடத் தெரியாதவர். இவரது இறுதிக்காலத்தில் தொண்டையில் புற்று நோய் ஏற்பட்டு அவரது நேர் சீடர்களால் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வந்தார்.

இப்படி இருக்கும் காலத்தில் ஒருவர் இவரைத் தூற்றியே திரிந்து வந்தார். ஒரு நாள் இவருடைய மகனுக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு எந்தச் சிகிச்சையும் பயனளிக்கவில்லை. அக்காலத்தில் டாக்ரர் மகேந்திரத்திலால் சர்க்கார் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு சகல விதத்திலும் ஒத்தாசையாக இருந்து மருந்துகள் வழங்கியும் அடிக்கடி இவரைப்பார்த்து வர சியாம்புகூர் சென்றார். மணிக்கணக்காக இவருடன் உரையாடி மகிழ்ந்தார். இத்தருணம் பல நோயாளர்களைப் பார்க்கும் வாய்ப்பை இழந்தார். ஆனால் இவர் இதனைப் பெரிதுபடுத்தவில்லை.

இத்தருணத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி பல வதந்திகளைப் பரப்பியவரது மகன் இறக்கும் தறுவாயில் இருக்கும் போது வேறு வழியின்றி டாக்ரர் மகேந்திரத்திலால் சர்க்காரை நாடி தனது மகனுக்கு சிகிச்சை செய்து குணப்படுத்தும்படி வேண்டினார். இவர் பல முறை வேண்டியும் டாக்டர் இவரை செவிமடுக்காமல் தனது வண்டியில் ஏறி ஸ்ரீராமகிருஷ்ணரை பரிசோதிக்க சியாம்புகூர் சென்றார். இம்மனிதர் வண்டியின் பின்னால் ஓடியபடி ஸ்ரீராமகிருஷ்ணரின் முன்னால் சென்று தன் துயரத்தை வெளிப்படுத்தினார். இதனை கேள்வியுற்ற ஸ்ரீராமகிருஷ்ணர், தான் ஒரு வயோதிபன், தனக்கு வந்த நோயை பெரிதுபடுத்தாது, இவரது மகன் ஒரு சிறுவன் என்ன பாடுபடுகின்றானோ? என்று இரக்கம் கொண்டு டாக்ரர் மகேந்திரத்திலால் சர்க்கரை உடனடியாக அங்கு சென்று அச்சிறுவனுக்கு சிகிச்சை அளிக்கும் படி பணித்தார். இதனை செவிமடுத்த அம்மனிதர் தான் செய்த தவறை நினைத்து விம்மி விம்மி அழுது நிலத்தில் புரண்டு விழுந்து தான் புரிந்த தவறுகளை மன்னிக்கும்படி வேண்டினார். இப்படியான ஒரு அபூர்வ மனிதரை இன்று காண வாய்ப்பில்லை!

அன்னையின் அடியவன்
ஸ்ரீராமகிருஷ்ணா
சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# செல்வம் தரும் ஏகாதசி விரதம்

ஏகாதசி விரதத்தின் முக்கியத்துவத்திற்காக ஒரு கதையே இருக்கிறது.

ஏகாதசி விரதம் இருப்பவர்கள் அன்று முழுவதும் ஏதும் சாப்பிடாமல் உபவாசம் இருப்பார்கள். சிலர் பெருமாளின் பிரசாதமான துளசித் தீர்த்தம் மட்டும் எடுத்துக்கொள்வர். இவர்கள் மறுநாள் காலை துவாதசி திதியின் போது சாப்பிடும் முதல் உணவுக்கு 'பாரணை' எனப் பெயர். துறவிகள் பாரணையையும் பிச்சை எடுத்தே உண்பர். இப்படி ஆதி சங்கரரும் ஏகாதசி விரம் இருந்த மறுநாள் பாரணைக்காக பிச்சை எடுக்கச் சென்றபோதுதான் ஓர் அம்மையார் காய்ந்த நெல்லிக்கனி ஒன்றைக் கொடுக்க, அவளது ஏழ்மை விலக, கனகதாரா இஸ்தோத்திரம் பாடினார். மெய்யான ஏகாதசி விரதம் கொடுக்கின்ற மனதையும் அதன் மூலம் செல்வம் பெருகும் வளத்தையும் கொண்டுவரும் என்பது நம்பிக்கை.

## வெள்ளி நற்சிந்தனை

# 07 செவ்வியல் தமிழில் சீர்மியம்

இன்று "இறைவழிபாடு பற்றிய தெளிவின்மை ஒன்று தோன்றியுளது. பழைய வழிபாட்டு நடைமுறைகளைப் பற்றிய ஐயவினாக்கள் பல எழுந்துள்ளன. முன்னோர்களுடைய இறை பற்றிய விளக்கங்களையெல்லாம் யாரும் நம்புவதில்லை. நமது முன்னோர் வாழ்வியல் இயற்கையோடு இறுகப்பிணைந்திருந்தது. அதனால் இயற்கையின் பேராற்றலை வழிபட்டனர். தொன்மக் கதைகளையும் புராணக் கதைகளையும் வாய்மொழியாகப் பரப்பி வந்தனர். மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தமென நினைத்தனர்.

ஆனால் காலப்போக்கில் பல்வேறு பண்பாட்டுக் கலப்பால் வாழ்வியல் முறைமைகள் மாற்றமடைந்தபோது வழிபாட்டு நடைமுறைகளிலும் ஐயங்கள் தோன்றியுள்ளன. இறைவன் பற்றிய செய்திகளையும் வகைப்படுத்திப் பார்க்கும் நிலையும் உருவாகியது. மணிவாசகரும் இத்தகைய நிலைக்கு ஆளாகியுள்ளார். சிவனைப் பற்றிய செய்திகளைத் தன்னுடைய நிலையில் நின்று ஆராய முற்படுகிறார். உலகம் முழுவதையும் படைத்தவன் பிரமன். பிரமனுடைய உந்திக்கமலத்திலிருந்து தோன்றியவன் திருமால். அத்திருமால் சிவனைத் தாமரை மலர்களால் பூசித்து எங்கும் தேடியும் காணமுடியவில்லை. சிவனிடம் சக்கராயுதத்தைப் பெறவே திருமால் பூசித்தான். நாள் தோறும் சக்கரத்தைப் பெறும் பொருட்டு ஆயிரம் செந்தாமரை மலர் கொண்டு பூசித்தான். அப்படிப் பூசித்தும் சிவன் காட்சி தரவில்லை. எனவே, மிகவும் வருத்தங்கொண்டு ஒரு நாள் சிவனை வழிபடும் போது ஆயிரம் மலர்களில் ஒன்று குறைந்து விட்டது. உடனே தன்னுடைய கண்ணை மலராக இறைவன் திருவடியில் சார்த்தி வழிபட்டான் என்பது முன்னோர் கூறிய வரலாறு.

மணிவாசகர் இவ்வரலாற்றையும் சிவன் இவ்வுலகத்தில் பேய்க்கணங்களோடு கூடி சுடுகாட்டில் கூத்தாடியதையும் போக்கு இல்லாதவனாய் புலியின் தோலை அரையிலே ஆடையாக உடுத்து மிக்க களிப்புடன் அலைந்து திரிவதையும் எண்ணிப்பார்க்கிறார். இவ்வாறு இருவேறுபட்ட நிலையுடன் இறைவன் இருந்தவாறென்னே என்று நினைத்துப் பார்க்கிறார். புலியின் தோலை இறைவன் அரையிலே அணியாகக் கொண்டதற்கும் ஒரு வரலாறு கூறப்படுகிறது. தாருகாவனத்து முனிவர்கள் மீமாஞ்சக நெறியிலே நின்று வேள்வி இயற்றிச் சிவனைக் கொல்வதற்காக ஏவிய புலியை அவர்கொன்று அதனுடைய தோலை உடுத்தார் என்பது புராணக் கதையாகும்.

இவ்வாறு இறைவன் குணத்தையும் செயலையும் விமர்சன முறையில் மணிவாசகர் எடுத்துக் கூறுவது அவரது உள்ளத்து நிலையைக் காட்டுகிறது. ஒருவருடைய முரண்பட்ட செயற்பாடுகளைக் கண்டு மனம் தளர்வோர் மணிவாசகரின் உள்ளத்தை ஒத்த உள்ளமுடையவர். உலக வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் முரண்பாட்டை நீக்குவதற்கு எம்மை இறையடியாராக மாற்றிவாழ்வதேபயன்தரும். இறைவன் ஆட்கொண்டமையால் இறையுணர்வு பெற்ற மணிவாசகர் முழுமையாக உலகியல் வாழ்வை விட்டுவிடமுடியாதவராக உள்ளார். எல்லாம் இறைவன் நியதிப்படியே என வாழ்வது மனதிற்கு அமைதி தரும். எங்கும் இறைவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையே எமது வாழ்க்கைக்கு உறுதுணையாகவுளது. அதனையே மணிவாசகர் தனது பாடலில் விளக்கியுள்ளார்.

"முழுவதுங் கண்ட வனைபடைத்
தான்முடிசாய்த்து முன்னாட்
செழுமலர் கொண்டெங் குந்தேட
அப்பாலனிப்பால்எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடகமாடிக்
கதியிலியாய்
உழுவையின்தோலுடுத்துன்மத்த
மேல்கொண் டுழிதருமே"

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

# இலங்கை அணிக்கு வாய்ப்பு

அதிரடியான ஜெயசூரியா இல்லை. அனல்கக்கும் வாஸ் இல்லை. முரளிதரன் மட்டும் தான் இருக்கிறார்.

இருந்தாலும் இம் முறை உலகக் கிண்ணம் இலங்கைக்குதான் என்று எல்லோரும் சொல்கிறார்கள்.

உலகக் கிண்ணத் தொடர் இந்திய துணை கண்டத்தில் நடக்கிறது என்று தெரிந்ததுமே அதற்கேற்றால்போல் அணித்தேர்வு.

சூழலுக்கு ஏற்ப பயிற்சி என அனைத்து அணிகளையும் விட முன்னணியில் நிற்கிறது இலங்கை.

கடந்த உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலிய அணியுடன் இறுதிப்போட்டியில் மோதியது. ஆனால் வெற்றி கிட்டவில்லை. இம்முறை வெற்றி பெறவேண்டுமென்ற வெறியில் அணித்தலைவர் சங்கக்கார.

அதிரடிக்கு டில்சான். நிலையான ஆட்டத்திற்கு ஜெயவர்தன. சரவெடிக்கு மத்யூஸ். இன்னும் சமார சில்வா, தரங்கா கப்புகெதர, சமரவீர... எல்லோருமே சராசரி துடுப்பாட்ட வீரர்கள் தான்.

ஆனால் குறிப்பிட்ட அளவாவது ஓட்டம் குவிப்பது நிச்சயம். பந்து வீச்சில் மலையென மலிங்க இருக்கிறார். துணைக்கு குலசேகர, பெர்னாண்டோ, பெரேரா வேறு.

சுழலுக்கு முரளிதரன், மெண்டிஸ் மொத்தத்தில் கலவையான அணி.

களத்தடுப்பிலும் முதலிடம்; இம்முறை உலகக் கிண்ண தொடரிலும் முதலிடம் பெறத் துடிக்கிறது. இலங்கை அணிதான் ஜெயிக்கும் என உலகின் முன்னணி வீரர் களும் கூறுகிறார்கள்.



அணித்தலைவர்- சங்கக்கார
2009 - 2011

| | |
|---|---|
| ஆட்டம் | -36 |
| வெற்றி | -21 |
| தோல்வி | -12 |
| முடிபில்லை | -03 |
| **பலம்** | சராசரி துடுப்பாட்டம், சாமர்திய பந்துவீச்சு, சபாஷ் களத்தடுப்பு |
| **பலவீனம்** | திடீர் தோல்விகள் |

மிரட்டலுக்கு




மலிங்க

அதிரடிக்கு



டில்சான்

சரவெடிக்கு



மத்யூஸ்

சுழலுக்கு



முரளி



மெண்டிஸ்

வேகத்திற்கு



குலசேகர


# இந்திய அணிக்கு சாதகம்



அணித்தலைவர்- மகேந்திரசிங் தோனி
2007-2011

| | |
|---|---|
| ஆட்டம் | -93 |
| வெற்றி | -52 |
| தோல்வி | -34 |
| முடிபில்லை | -07 |
| **பலம்** | சகலதுறை வீரர்கள் |
| **பலவீனம்** | வேகப் பந்து வீச்சு |

மிரட்டலுக்கு



சேவாக்

அதிரடிக்கு



ரெய்னா

சரவெடிக்கு



யூசுப் பதான்

சுழலுக்கு



ஹர்பஜன்



சாவ்லா

வேகத்திற்கு



சகீர்கான்

உலகக் கிண்ணத்தை கைப்பற்ற வேண்டுமென்ற கனவுடன் இந்திய அணி களமிறங்குகிறது.

அதற்கேற்ப இந்திய அணித் தேர்வும் நடந்திருக்கிறது. டெண்டுல்கர்-சேவாக் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகவும் அதைத் தொடர்ந்து காம்பீர், ஹோலி நிதானமும் யுவராஜ் சிங்கின் விளாசலும் ரெய்னாவின் அதிரடியும் தோனியின் நிதானமும் யூசுப் பதானின் சரவெடியும் இம்முறை இந்திய அணிக்கு உலகக் கிண்ணத்தை பெற்றுத் தருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பந்து வீச்சிலும் சகீர்கான், முனாப் பட்டேல், நெகரா, சிறிசாந்த் நல்ல நிலையிலுள்ளனர்.

சுழல்பந்து வீச்சுக்கு ஹர்பஜன், அஸ்வின், சாவ்லா ஆகியோர் கைகொடுப்பார்கள். தேவைப்படும் கட்டத்தில் சேவாக், யுவராஜ் ரெய்னா, யூசுப் பதான் ஆகியோர் பகுதி நேர பந்து வீச்சாளர்களாக பயன்படுத்தப்படுவார்கள்.

அனைத்து கலவையும் ஒருங்கிணைந்த பலம்வாய்ந்த அணிக்கு "மிஸ்டர் கூலாக" தோனி அணித்தலைவராக வாய்த்திருப்பது கூடுதல் பலம்.

நெருக்கடிகளையும் எந்த வித பதற்றமும் இல்லாமல் எளிதாக கையாளுவது இந்திய அணிக்கு சாதகமான அம்சம்.

அத்தோடு பயிற்றுவிப்பாளர் கிரிஸ்டன், வீரர்களின் தனித்திறமையை கண்டுபிடித்து ஊக்குவித்து வருகிறார்.

மொத்தத்தில் உலகக் கிண்ணத்தை வெல்லும் உத்வேகத்தில் இம்முறை இந்திய அணி களமிறங்குகிறது.

# அவுஸ்திரேலியா அடங்குமா? அடித்து நொறுக்குமா?

நடப்பு சம்பியன், ஹட்ரிக் சாதனைபடைத்த அணி, 4 முறை உலகக் கிண்ணத்தை வென்ற ஒரே அணி, எல்லாவற்றுக்கும் மேலாக அணித்தலைவர் பதவியில் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிய 22 போட்டிகளிலும் வென்று தனிப்பெரும் சாதனை படைத்திருக்கும் பொன்டிங்கை தலைமையாக கொண்ட அணி.

இப்படியெல்லாம் புகழ் பெற்ற அவுஸ்திரேலிய அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடரில் எந்த இடத்தைப் பிடிக்கும்.

இதுதான் கிரிக்கெட் ரசிகர்களின் கேள்வி.

சமீபத்தில் அவுஸ்திரேலிய அணிக்கு நிறைய சறுக்கல்கள். உள்ளூரிலும் வெளியூரிலும் பல அணிகளிடம் அடி வாங்கிய அதிர்ச்சி, போதாக்குறைக்கு ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து உள்ளூர் ரசிகர்கள் மத்தியில் வைத்து கும்மியெடுத்தது.

ஆனால் அவுஸ்திரேலிய அணி பீனிக்ஸ் பறவை. ஒரு நாள் தொடரை 6:1 என்ற கணக்கில் வென்று அசத்தியது. இந்த வெற்றிதான் தன்னம்பிக்கை.

இப்போதும் ஒருநாள் போட்டி அரங்கில் நம்பர்-1 தான். ஐ.சி.சி தரவரிசைப் பட்டியல் அப்படித்தான் கூறுகிறது.

ஆனால் உலகக் கிண்ணத் தொடரில் ஜெயிக்க இது போதுமா? மீண்டும் மிரட்ட வந்திருக்கிறார் பிரெட்லீ.

உலகக் கிண்ண 10 போட்டிகளில் 22 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார். தைட்டும் (11 போட்டிகளில் 23 விக்கெட்டுக்கள்) இழுத்து வரப்பட்டுள்ளார்.


அதிரடிக்கு வையிட் இருக்கிறார். சரவெடிக்கு வோட்ஷன் உள்ளார். ஜெயிப்போம் என்கிறார் பயிற்றுவிப்பாளர் நீல்சன்.



அணித்தலைவர்- ரிக்கி பொன்டிங்
2002 - 2011

| | |
|---|---|
| ஆட்டம் | -221 |
| வெற்றி | -160 |
| தோல்வி | -48 |
| சமநிலை | -02 |
| முடிபில்லை | -11 |
| **பலம்** | பந்துவீச்சு, களத்தடுப்பு |
| **பலவீனம்** | சொதப்பலான துடுப்பாட்டம், தொடர் தோல்வி |

மிரட்டலுக்கு




பிரட் லீ

அதிரடிக்கு




வையிட்

சரவெடிக்கு




வோட்ஷன்

சுழலுக்கு



கிரேஷா

வேகத்திற்கு



தைட்

# டாகாவில் கண்கவர் கலைநிகழ்வுகளுடன் வண்ணமயமான ஆரம்ப விழா

(டாகா)

பங்களாதேஷ் தலைநகர் டாகாவில் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்ப விழா நேற்று வண்ணமய்மாக நடந்தது. ஆயிரக்கணக்கான கலைஞர்களின் ஆடல், பாடல், ஆரவாரம், லேசர் ஷோ மற்றும் கண்கவர் வாணவேடிக்கையுடன் நிகழ்ச்சிகள் களைகட்டின.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் இணைந்து பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடத்துகின்றன. இதில் ஏ,பி பிரிவில் இந்தியா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட 14 அணிகள் பங்கேற்கின்றன. நாளை முதல் லீக் போட்டிகள் ஆரம்பமாகின்றது.

இந்த உலகக் கோப்பைத் தொடரின் பிரமாண்டமான ஆரம்ப விழா நேற்று பங்களாதேஷ் தலைநகர் டாகாவிலுள்ள மிர்பூர் பங்கபந்து தேசிய விளையாட்டு மைதானத்தில் நடந்தது.

முதலில் பங்களாதேஷ் தேசிய கீதத்துடன் விழா ஆரம்பமானது. பங்களாதேஷின் முன்னணிப் பாடகர்களின் நடன நிகழ்ச்சிக்குப் பின் யானை உருவ ஸ்டம்பி சின்னம் மைதானத்திற்கு கொண்டுவரப்பட்டது.

### பாரம்பரிய ரிக்ஷா

நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங், இந்தியாவின் தோனி, பங்களாதேஷ் அணித்தலைவர் சாகிப் அல் ஹசன் உள்ளிட்ட 14 அணிகளின் தலைவர்கள் பங்களாதேஷின் பாரம்பரிய ரிக்சாவில் மைதானத்திற்குள் அழைத்து வரப்பட்டனர். இதில் தோனி, சகிப் அல் ஹசன் வரும்போது மைதானத்தில் பலமான கைதட்டல் எழுந்தது.

### எயிட்ஸ் விழிப்புணர்வு

இந்தியாவின்பிரபலபாடகர்சோனு நிகாம், லெட்ஸ் கோ பார் குளோரி... என ஆரம்பமாகும் பாடலைப் பாடினார். பின் இந்தியாவின் சேவாக், இலங்கை அணித்தலைவர் சங்கக்கார இணைந்து வழங்கிய எயிட்ஸ் விழிப்புணர்வு வீடியோ ஒளிபரப்பப்பட்டது.

### பிரதமர் ஆரம்பம்

இதனை அடுத்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தலைவர் சரத் பவர் வாழ்த்திப் பேசினார். பின் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை ஆரம்பித்து வைத்தார். இவர் எதிரேயிருந்த கணனித் திரையில் தனது கையை வைக்க அரங்கம் முழுவதும் வாண வேடிக்கையால் அதிர்ந்தது.

### வானில் கிரிக்கெட்

பின் லேசர் ஷோ மூலமாக உலகக் கிண்ணம், ஆடுகளம் (பிட்ச்), நாணயச் சுழற்சி போடுவது போல தோன்றச் செய்தனர். தரையிலிருந்து 200 மீற்றர் உயரத்தில் கலைஞர்கள் இடுப்பில் கயிற்றைக் கட்டிக் கொண்டு பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு போன்ற கிரிக்கெட் நிகழ்வுகளை 3டி ஷோ மூலம் நடத்தியது மெய்சிலிர்க்க வைத்தது.

### இந்திய நிகழ்ச்சி

இந்தியா சார்பில் கலை நிகழ்ச்சிகள் நடந்தபோது, இரசிகர்கள் உற்சாகக் குரல் எழுப்பினர். இலங்கை சார்பில் நடந்த, கடலில் படகுப் பயணம் செய்வது போன்ற காட்சி, நேரில் பயணம் செய்யும் உணர்வை ஏற்படுத்தியது.

### பாரம்பரிய நிகழ்ச்சி

பிரபல இசைக் கலைஞர்கள் பங்களாதேஷின் சபீனா யாஷ்மின், ருனா லைலா, கிராமியப் பாடகர் மும்தாஜ் பேகம் போன்றவர்கள் திறமையை வெளிப்படுத்தினர். 1952-ல் நடந்த மொழிப் போர் இயக்கம், 1971-ல் விடுதலைப் போராட்டம் உள்ளிட்ட பல வரலாற்று நிகழ்ச்சிகளை மைதானத்தில் நடத்திக் காட்டினர். கனடாவின் பிரபல பொப் பாடகர் பிரயன் ஆடம்ஸ்சின் நிகழ்ச்சியில் இரசிகர்கள் துள்ளல் நடனம் ஆடினர்.

### பாடல் அறிமுகம்


பத்தாவது உலகக் கிண்ணதொடரின் அதிகாரப் பூர்வ பாடல் நேற்று அறிமுகம் செய்யப்பட்டது. டாக்காவில் நடந்த ஆரம்ப விழாவில் இந்தியாவின் பிரபல பாடகர் சங்கர் மகாதேவன், ஈசான், லாய் ஆகிய மூவரும் இணைந்து, தே குமா கே... எனத் ஆரம்பமாகும் தீம் பாடலை அறிமுகம் செய்தனர். இது இந்தி, வங்காளம், சிங்கள மொழியில் வெளிவந்துள்ளது.





2011 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான ஆரம்ப நிகழ்வுகளில்





20.. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான ஆரம்ப நிகழ்வுகளில்







# தமிழக முதல்வர் கருணாநிதிக்கு...

வழிகாட்டலை கொடுத்துவருவது கண்டு நாம் அகம் மகிழ்கின்றோம்.

நீங்கள் தேடிய இந்த வழிமுறையே ஈழத் தமிழ் மக்களுக்கும் ஏற்புடைய ஒன்று. ஆகவே கொள்கை வழியில் ஒன்றுபட்டு நிற்கும் நான் உங்களோடு அவசரமும் அவசியமும் மிக்க விடயமொன்றை மனம் திறந்து பேசவிரும்புகின்றேன்.

தமிழகம் ஈழத்தமிழ் மக்களின் வேரடி மண்! தமிழக மீனவ மக்களுக்கும் ஈழத்தமிழ் மீனவ மக்களுக்குமிடையில் கடற்பரப்பில் நிகழ்ந்துவரும் தகராறுகள் எமக்கு துயரங்களைத்தந்து கொண்டிருக்கின்றன.

கடல் எல்லை தாண்டிவந்து எம் தமிழக மீனவ உறவுகள் ஈழத்தமிழ் மீனவ மக்களின் கடற்பரப்பில் தொழில் செய்து வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டு வளங்கள் அழிக்கப்பட்டுவருவதாகவும் இது வரை வந்த முறைப்பாடுகள் குறித்து நீங்கள் அறிவீர்கள்.

இது குறித்து நான் தமிழக மீனவ சங்கங்களுக்கும் ஈழத்தமிழ் மீனவ மக்களின் சமாசங்களுக்கும் இடையில் சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்திருந்த தருணத்தில்...

பேசும் மொழியாலும் செய்யும் தொழிலாலும் ஒன்றுபட்டிருக்க வேண்டிய இருதரப்பு உறவுகளுக்குமிடையில் இருக்கும் உறவுப் பாலம் உடைந்து சிதறாமல் இருக்க நாம் முயன்று வரும் சூழலில்...

எம் காதில் விழுந்த செய்தி எமக்கு மிகுந்த மனவருத்தங்களை தந்திருந்தது. இலங்கைக் கடல் எல்லைத்தாண்டி வந்ததாக கூறப்படும் தமிழக மீனவ உறவுகளை பருத்தித்துறை கடற்றொழிலாளர்கள் பொலிஸாரிடம் ஒப் படைத்திருப்பதாக எமக்கு தகவல் வந்தது.

தகவல் அறிந்த நான் உடனடியாகவே சம்பவ இடத்திற்கு நேரில் விஜயம் செய்திருந்தேன். இலங்கை கடற்றொழிலாளர்களோடு இது விடயம் குறித்து விசாரித்தபோது நடந்த சம்பவங்கள் குறித்து எம்மிடம் எடுத்துரைத்தார்கள்.

கடந்த கால அழிவு யுத்தத்தின்போது தொழில் ரீதியாக பாதிப்படைந்திருந்த அவர்கள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் அழிவு யுத்தம் முடிபுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் மறுபடியும் தாம் தமது கடற்பரப்பில் தற்போது சுதந்திரமாக தொழில் புரிந்துவருவதாகவும், ஆனாலும் இலங்கை கடற்பரப்பில் நுழையும் சில தமிழக மீனவர்களால் தமது கடல் வளங்களை அனுபவிக்க முடியாமல் இருப்பதாகவும் தமது மனத்துயரங்களை வழமைபோல் என்னோடு பகிர்ந்து கொண்டனர்.

இதேவேளை தமிழக மீனவ உறவுகளோடு நான் பேசி அவர்களது நிலைமைகள் குறித்தும் அக்கறையோடு அறிந்து கொண்டேன். அப்போது தாம் இலங்கை கடல் எல்லைத் தாண்டி வந்ததன் தவறுகளுக்காக தாம் வருந்துவதாகவும் என்னிடம் தெரிவித்திருந்தனர்.

பொலிஸாரின் காவலில் இருக்கும் தமிழக மீனவ மக்களின் அத்தியாவசிய தேவைகளில் பொலிஸாருடன் இணைந்து தாமும் கவனம் செலுத்துவதாக பருத்தித்துறை கடற்றொழிலாளர்கள் சம்மதம் தெரிவித்திருந்தமை எனக்கு பெரும் ஆறுதலை தந்திருந்தது.

இந்நிலையில் தமிழக மீனவ உறவுகள் விடுவிக்கப்பட்டு அவர்களை வீடு திரும்ப அனுமதிப்பதற்காக முயற்சிகளில் நான் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றேன். எனது முயற்சிகள் வெற்றியளிக்கும் என்றும் நம்புகிறேன்.

இதேவேளை கடல் எல்லைகளைத் தாண்டும் தவறான செயல்களை முழுமையாக தடுத்து நிறுத்துவதன் ஊடாக தமிழக மற்றும் இலங்கை மீனவ மக்களுக்கு இடையிலான தகராறுகளையும் தடுத்து நிறுத்தி நீடித்த நேச உறவுகளை வளர்க்கவும் முடியும் எனவும் நான் நம்புகின்றேன். இதற்கு தங்களது ஒத்துழைப்பும் கட்டாய தேவையாகும்.

இருதரப்பு மீனவ மக்களிடையேயும் நிரந்தரமான நேச உறவுகளை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட நேரடியாகவே உங்கள் பிரதிநிதி ஒருவர் இங்கு அனுப்பி வைக்கப்படுவதும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

உங்கள் பிரதிநிதியாக ஒருவர் இங்கு வரும் போது இருதரப்பு மீனவ மக்களும் பகைமை மறந்து பரஸ்பரம் புரிந்துணர்வோடு செயற்படுவதற்கான சூழல் ஒன்றையும் உருவாக்கும் இணக்கப் பேச்சுகளுக்கான ஏற்பாட்டாளராக நான் செயற்படுவேன் என்றும் உறுதியுடன் உங்களிடம் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இவ்விடயங்கள் குறித்து கௌரவ ராஜ்சபா உறுப்பினர் கனிமொழி அவர்களுடனும் நான் தொடர்புகொண்டுஎடுத்துவிளக்கியிருக்கின்றேன்.

ஈழத்தமிழ் உறவுகளின் உணர்வுகளை புரிந்து கொண்டவர்கள் நீங்கள். அதேபோல் தமிழக உறவுகளின் உணர்வுகளையும் புரிந்து கொண்டவன் நான்.

இருதரப்பு உறவுகளும் இடையறாது நீடித்து நிலைக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடாகவும்ஸ்ரீ கடந்தகால அழிவு யுத்தத்தினால் துயரங்களை சுமந்து நின்ற ஈழத்தமிழ் மீனவ மக்களின் சார்பான மனிதாபிமான வேண்டுகோளாகவும் இம் மடலை உங்களுக்கு நான் அனுப்பி வைக்கிறேன்.

டக்ளஸ் தேவானந்தா, பா.உ.
செயலாளர் நாயகம்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்.

# உள்ளூராட்சித் தேர்தல் மூலம்...

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் விடுதலைக்காக போராடிய சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம், சித்திலெப்பே ஆகியோர் இன, மத பேதமின்றி அனைவரினதும் ஒற்றுமைக்காக உழைத்தவர்கள்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வெற்றிபெற்று ஐக்கிய தேசியக் கட்சி குட்டி அரசாங்கத்தை அமைப்பதுதான் குறிக்கோள். இவ்வாறு பிரதேச சபையில் ஆரம்பித்து நகரசபை, மாநகரசபை, மாகாண சபை, நாடாளுமன்றம் என அதிகாரத்தைப் பலப்படுத்தி சர்வதேச மட்டத்தில் இலங்கையின் ஆதிக்கத்தை வலுப்படுத்துவதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம்.

இலங்கை சுதந்திரமடைய முதல் பிறந்தவன் என்ற வகையில் அப்போது தேசிய விளையாட்டு அணிகளில் தமிழ் வீரர்களை இணைத்து விளையாடுவோம்.

எமக்கு இரத்தம் தேவை என்றபோது தமிழ் இரத்தம், முஸ்லிம் இரத்தம் எனப் பார்ப்பதில்லை. எனவே சிறுபான்மை மக்கள் என்ற பாகுபாடில்லை.

இன ஒற்றுமைக்காக சகல இனங்களிலும் தலைவர்களை உருவாக்கி ஐக்கிய தேசியக் கட்சி நாட்டில் சக்திமிக்க அரசை அமைக்கும்.

தமிழ் மக்கள் மீது பற்றுக்கொண்டவர் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான். அவர் விரைவில் யாழ்ப்பாணத்திற்கு வருவார். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க,

கடந்த பல வருடங்களின் பின் வடக்கில் உள்ளூராட்சிச்சபை தேர்தல் நடைபெறவுள்ளது. யுத்தத்தின்பின் பல அபிவிருத்தி வேலைகள் மந்தகதியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் மக்கள் தமது பிரதிநிதிகளை தேர்வு செய்வதன் மூலம் அபிவிருத்திப் பணிகள் விரைவாக முன்னெடுத்துச் செல்லும் அதிகாரம்ஜனநாயகரீதியில் கிடைக்கும்.

அபிவிருத்திக்கான சட்டங்களை இயற்றும் உரிமை உள்ளூராட்சி சபைகள் மூலம் கிடைப்பதற்கு நல்ல சந்தர்ப்பம்.

இத் தேர்தலில் துடிப்பு மிக்க வேட்பாளர்களை திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவு செய்து மகேஸ்வரன் அணியில் களமிறக்கியுள்ளார்.

அபிவிருத்தி, பொருளாதார முன்னேற்றத்துக்கு எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சியே உதவும் என்பது அனைவருக்கும் தெரியும் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இதில் கருத்துரைத்த டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, 13ஆவது திருத்தச்சட்டத்தை உருவாக்கியது ஐக்கிய தேசியக் கட்சிதான். அதனை முழுமையாக அமுல்படுத்த தற்போதுள்ள அரசாங்கம் தவறியுள்ளது.

எனவே உங்களிடம் வரும் அரசாங்கத் தரப்பினரிடம், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியுமா? எனக் கேளுங்கள் என்றார். (ந-5,6)

# அமைச்சர்...

விடுதலை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்புவ தாக அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பீரிஸுடன் தொலைபேசி மூலம் பேசிய பின் செய்தியாளர்களைச் சந்தித்த போது அமைச்சர் கிருஷ்ணா இத் தகவலைத் தெரிவித்துள்ளார். இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு இரு நாடுகளின் அரசாங்கமும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் கூறினார். இலங்கை கடற்பரப்பில் மீன் பிடித்ததாகக் கூறப்படும் 138 இந்திய மீனவர்கள் கடந்த சில நாட்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ் விடயம் தமிழ்நாட்டில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. (ந-5)


SPECIAL ENGLISH CLASS

LONDON ENGLISH

SPOKEN ENGLISH & GRAMMAR

- 100 மணித்தியாலங்களில் ஆங்கிலம் பேச, எழுத-வாசிக்க நவீன முறையில் ஆரம்பத்திலிருந்து இலகுவாகக் கற்கலாம்.
- உலகத்திலேயே அதிசிறந்த பாடத்திட்டங்களில் ஒன்றாக பதிப்புரிமை பெற்றது.
- கடந்த 30 வருடங்களாக எங்களிடம் கற்ற நூற்றுக்கணக்கானவர்கள் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் மருத்துவம், பொறியியல், பட்டப்படிப்புகள் மற்றும் பல உயர் பதவிகளில் இருக்கின்றார்கள்.
- Spoken English கற்பதற்கு மிகத் தேவையான 100 கருத்துக்கள் கொண்ட யாழ்.நகரில் உள்ள ஒரேயொரு கைநூல் "Etiquette in Spoken English" இலவசம்.
- அதிசிறந்த பல ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட பாடங்கள்.
- உரையாடல் - நேர்முகப் பரீட்சைப் பயிற்சிகள்
- வெளிநாடுகளில் கல்வி கற்க - வேலை பார்க்க - சுற்றுலா செல்பவர்களை ஒரு மாதத்தில் தயார்ப்படுத்தல்.
- ஆசிரியர்கள் - N.G.O. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு விசேட சனி - ஞாயிறு வகுப்புக்கள்
- அச்சடித்த பாடங்கள் - பயிற்சிகள் - வீடியோ பாடங்கள்
- IELTS Course
- ஆரம்பம்: 20/02/2011

Course Co-ordinator: Mr.A.Rajagopalan

(3832)

- தபால் மூலம் கல்வி (Correspondence Course)
வீட்டில் இருந்தவாறே 3 மாதத்தில் தபால் மூலம் ஆங்கிலம் பேசக் கற்கலாம். ஒவ்வொரு போயா விடுமுறையிலும் யாழில் 3 மணித்தியால இலவச கருத்தரங்கு

- SKYPE English Classes - Skype Chatting (Including Foreign residents)

SUCCESS GUARANTEED - முழு விபரங்களும் அறிய நேரில் தொடர்பு கொள்ளலாம். (அல்லது) Phone: 077-3233999 (அல்லது) ரூபாய் 15/- முத்திரை ஒட்டிய உங்கள் சுய விலாசம் தெளிவாக எழுதிய நீள தபால் உறை உள்ளே வைத்து விண்ணப்பிக்கலாம்.

JAFFNA TECHNICAL INSTITUTE

No.46, Clock Tower Road, Jaffna. (வெலிங்டன் சந்திக்கு வடக்கே- 50 யார்) / Sir Pon. Ramanathan Road. (கலட்டிச் சந்திக்கு மேற்கே- 50 யார்,) யாழ்ப்பாணம்.



மணமகன் தேவை

கௌரவ இந்து, 30 வயதுடைய 1இல் செவ்வாய் கிரக பாவம் 80 உடைய B.Sc. Bioscience பட்டதாரி மணமகளுக்கு உள்நாட்டில் அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு:- 0779674081

(3837)



10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08.05.1984

மறைவு 08.03.2001



அமரர் கோபாலப்பிள்ளை தினகரதாஸ்

தினகரனே! ஆண்டுகள் பத்து சென்றாலும் கலையாதடா எம் மனதில் உன் நினைவுகள். உனது சூரியச் சிரிப்பும் குறும்பு வார்த்தைகளும் இப்போதும் எம் மனதில் உள்ளதடா. காலம்தான் உனை அழித்தாலும் உன் உறவுகள் மனதில் என்றும் நீ பசுமை நினைவுகளாய் வாழ்வாய் நிஜமாக.

துன்னாலை, கரவெட்டி.

உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

(சி-2477)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.